மல்கியா 4:2

யோவான் 17:17

நீதியின் சூரியன் உதிக்கும்
அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்
உம்முடைய வசனமே சத்தியம்

# புது உடன்படிக்கை

மில்லினிய வேதாகம சத்திய இயக்கம்

*Vol. 123* மே *2026*

# யாக்கோபு தேவதூதனுடன் போராடுவது – அடையாளம் மற்றும் சிறிய நிஜநிறைவேறுதல்

## ஆதி. *32,33*

## *E Vol. 10, p. 133-139*

*1.* **ப**ரூஷியா காலத்தில் "உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரராகவும்" நட்சத்திர அங்கத்தினரின் அலுவலிலும் செயல்பட்ட பாஸ்டர் ரஸலோடு பில்கிரீமாக இருந்த பாஸ்டர் ஜான்சனின் செயல்பாடுகளின் சில நிகழ்வுகளை முன்னறிவிக்கும் ஒரு குறிப்பான சிறிய அடையாளம் யாக்கோபு தேவ தூதனோடும் போராடின நிகழ்வாகும் (ஆதி. *32: 24-32*). இந்த நிகழ்வின் நிஜ நிறைவேறுதலின் சூழ்நிலை அமைப்பைப் புரிந்து கொள்ளும் போது இந்த காரியங்கள் நமக்கு தெளிவாகும்.

*2.* யாக்கோபு லாபானை விட்டு செல்வது, தன்னோடு தன் மனைவிகளையும் பிள்ளைகளையும், மந்தைகளையும் அழைத்துக் கொண்டு போவது ஆகியவைகள் பின்வரும் காரியங்களை அடையாளப்படுத்துகின்றன: பாஸ்டர் ரஸல் மற்றும் அவருடைய ஐந்து விசேஷித்த உதவியாளர்கள் (யாக்கோபு -இவர்களில் கடைசி உதவியாளர் பாஸ்டர் ஜான்சனாக இருந்தார். *1909*-ம் வருடத்திலிருந்து *1916*-ம் வருடம் அக்டோபர் *31*-ம் தேதி வரை பாஸ்டர் ஜான்சன் அந்த விசேஷித்த உதவியாளரின் அலுவலில் ஊழியஞ் செய்து கொண்டிருந்தார்) தேவனுடைய பெயரளவிலான ஜனங்களிடமிருந்து (லாபான்) தங்களைப் பிரித்துக் கொண்டு, அவர்களை விட்டு வெளியேறினார்கள். பன்னிரண்டு உக்கிராண சத்தியங்களையும், அந்த சத்தியத்திற்கு ஊழியஞ் செய்தவர்களையும் (மனைவிகள்), பரூஷியா சத்தியங்களையும் (ராகேல்), பிரதிஷ்டை செய்யவில்லையென்றாலும் அவர்களோடு ஒத்துணர்வு கொள்பவர்களையும் (பிள்ளைகள்), சிறுமந்தை வகுப்பாரையும் (யோசேப்பு) மற்றவர்களையும் (மந்தைகள்) தங்களுடனே கொண்டு போனார்கள்.

*3.* யாக்கோபு ஏசாவைச் சந்திப்பதற்குச் சற்று முன்பும், அதனோடும் நிகழ்ந்த சம்பவங்கள் நிஜ நிறைவேறுதலான யாக்கோபு (*1910*-ம் வருடத்தில் நட்சத்திர அங்கத்தினராக இருந்த பாஸ்டர் ரஸல் மற்றும் அவருடைய விசேஷித்த உதவியாளராகிய பாஸ்டர் ஜான்சன்) யூதர்களை (ஏசா) சந்திப்பதற்குச் சற்று முன்பும் அதனோடும் நிகழ்ந்த சம்பவங்களையும் அடையாளப்படுத்துகின்றன.



*4.* யாக்கோபு ஏசாவிடமிருந்து தப்பி ஓடின காரியமானது, யூத யுக அறுவடை காலத்தில் *12* அப்போஸ்தலர்களும் *70* பேர்களும் அவர்களைத் துன்புறுத்துகிற இஸ்ரயேலர்களிடமிருந்து தப்பிச் சென்றதை அடையாளப்படுத்துகிறது. யாக்கோபு நீண்ட காலத்திற்கு லாபானோடு தங்கி இருந்த காரியமானது, சுவிசேஷ யுக இடைப்பட்ட காலத்தில் *35* நட்சத்திர அங்கத்தினர்களும் அவர்களுடைய *35* விசேஷித்த உதவியாளர்களும் இரு

## தூது நிரல்

*1.* யாக்கோபு தேவதூதனுடன் போராடுவது ....*1*
*2.* பாஸ்டர் பவுல் S L ஜான்சனின் இளவயதில் யூதர்களோடு அவருக்கு இருந்த அனுபவங்கள்....................................................*6*
*3.* கிறிஸ்தவனின் விடுமுறை நாட்கள்.............*7*
*4.* பரிமள தைலத்திலுள்ள செத்த ஈக்கள்........*11*
*5.* யாவே தேவனுடைய பாதஸ்தானம் மகிமைப்படுத்தப்படுவது.............................*13*

அறுவடைகளுக்கிடையில் பெயர் சபையில் தங்கி இருந்ததை அடையாளப்படுத்துகிறது. பாஸ்டர் ஜான்சன் இந்த நிஜ நிறைவேறுதலின் காரியத்தைக் குறித்துப் பாஸ்டர் ரஸலோடு பேசினபோது, யாக்கோபின் பயத்திற்கு (ஆதி. 32:7) பாஸ்டர் ரஸலின் அனுபவத்தில் எவ்வித நிறைவேறுதலும் இல்லாததை அறிந்து கொண்டார். அதில் நிஜ நிறைவேறுதல் பாஸ்டர் ஜான்சனின் அனுபவங்களிலிருப்பதைக் கண்டு கொண்டார்.

*5. ஆதி. 32:3-5* பின்பு, யாக்கோபு ஏதோம் சீமையாகிய சேயீர் தேசத்திலிருக்கிற தன் சகோதரனாகிய ஏசாவினிடத்துக்குப் போகும்படி ஆட்களை அழைப்பித்து: நீங்கள் என் ஆண்டவனாகிய ஏசாவினிடத்தில் போய், நான் இதுவரைக்கும் லாபானிடத்தில் தங்கியிருந்தேன் என்றும், எனக்கு எருதுகளும், கழுதைகளும், ஆடுகளும், வேலைக்காரரும், வேலைக்காரிகளும் உண்டென்றும், உம்முடைய கண்களில் எனக்குத் தயவு கிடைக்கத்தக்கதாக ஆண்டவனாகிய உமக்கு இதை அறிவிக்கும்படி ஆட்களை அனுப்பினேன் என்றும் உம்முடைய தாசனாகிய யாக்கோபு சொல்லச்சொன்னான் என்று சொல்லும்படி கட்டளைகொடுத்துத் தனக்கு முன்னாக அவர்களை அனுப்பினான். யாக்கோபு அதிக உடைமைகளுடன் கானானுக்குத் திரும்ப வரும் செய்தியை ஏசாவுக்கு அறிவிப்பதற்கு யாக்கோபு ஆட்களை அனுப்புவதென்பது, *1909*-ம் வருடத்தில் யூதர்களோடு தொடர்பு கொள்வதற்குப் பாஸ்டர் ரஸல் முதல் முதலாகச் செய்த முயற்சிகளை அடையாளப்படுத்துகிறது. அவர் கிறிஸ்தவ சபையின் கொள்கைகளின்படி அல்லாமல், சீயோனிஸம் என்ற கொள்கைகளுக்கிணக்கமாக யூதர்களோடு தொடர்பு கொள்ள முயன்றார்.

*6. ஆதி. 32:6-8* அந்த ஆட்கள் யாக்கோபினிடத்துக்குத் திரும்பிவந்து: நாங்கள் உம்முடைய சகோதரனாகிய ஏசாவினிடத்துக்குப் போய்வந்தோம்; அவரும் நானூறு பேரோடே உம்மை எதிர்கொள்ள வருகிறார் என்றார்கள். அப்பொழுது யாக்கோபு மிகவும் பயந்து, வியாகுலப்பட்டு, தன்னிடத்திலிருந்த ஜனங்களையும் ஆடுமாடுகளையும் ஒட்டகங்களையும் இரண்டு பகுதியாகப் பிரித்து: ஏசா ஒரு பகுதியின்மேல் விழுந்து அதை முறிய அடித்தாலும், மற்றப் பகுதி தப்பித்துக்கொள்ள இடம் உண்டு என்றான். யாக்கோபுக்கு விரோதமாக ஒரு சேனையுடன் ஏசா அவரை எதிர்கொள்ள வருகிறார் என்று அந்த ஆட்கள் அறிவித்த காரியமானது, யூதர்கள் பாஸ்டர் ரஸலைக் குறித்துச் சந்தேக மனப்பான்மையுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்று சில சகோதரர்கள் விசேஷமாகப் பாஸ்டர் ரஸலிடமும், அடுத்த நிலையில் பாஸ்டர் ஜான்சனிடமும் சொல்வதை அடையாளப்படுத்துகிறது. யாக்கோபு அவரோடிருந்தவர்களை இரண்டு பகுதிகளாகப் பிரிப்பதென்பது, யூதர்களின் தாக்குதல்களிலிருந்து உண்மையான ஆவிக்குரிய இஸ்ரயேல் என்னும் ஒரு பகுதியைப் பாதுகாப்பதற்குப், பாஸ்டர் ரஸல் ஆவிக்குரிய இஸ்ரயேலை, பெயரளவிலான மற்றும் உண்மையான ஆவிக்குரிய இஸ்ரயேல் என்னும் இரு பகுதிகளாகப் பிரித்துக் காண்பிப்பதை அடையாளப்படுத்துகிறது.

*7. ஆதி. 32:9-12* வரையுள்ள வசனங்களிலுள்ள ஜெபத்தின் நிஜ நிறைவேறுதலானது பாஸ்டர் ஜான்சன் ஏறெடுத்த ஒரு ஜெபமாக இருந்தது. ஏசாவைச் சமாதானப்படுத்தும் வெகுமதியாக யாக்கோபு அனுப்பின ஐந்து வகையான மிருக வகைகள் (ஆதி. *32:13-21*), "ஓவர் லேண்ட் மந்த்லி" (*Overland Monthly*) என்ற பத்திரிக்கையில் பாஸ்டர் ரஸல் "தேவனுடைய தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்கள்" (*God's Chosen People*) என்ற தலைப்பில் எழுதின பன்னிரண்டு கட்டுரைகளில் முதல் ஐந்து கட்டுரைகளை அடையாளப்படுத்துகின்றன. *1910*-ம் வருடம் பிப்ரவரி மாதத்தில் தொடங்கி மாதந்தோறும் (மந்தை மந்தைக்கு முன்னும் பின்னுமாக இடம் விட்டு) அந்த பத்திரிக்கையில் இந்த கட்டுரைகள் வெளியிடப்பட்டிருந்தன. ஐந்தாம் கட்டுரை ஜூன் மாத பத்திரிக்கையில் வெளிவந்தது. இந்த ஐந்து கட்டுரைகளும் யூதர்களின் மத்தியில் அதிக ஆர்வத்தையும் ஆவலையும் தூண்டிவிட்டன (ஆதி. *33:8*). *1910*-ம் வருடத்தின் முதல் சில மாதங்களில் பாஸ்டர் ரஸல் மற்றும் பாஸ்டர் ஜான்சன் கிறிஸ்தவர்களின் மத்தியில் மட்டுமே ஊழியம் செய்து கொண்டிருந்தார்கள் (ஆதி. *32: 21*). ஆனால் அந்த வருடத்தின் வசந்த காலத்தில் யூதர்களின் மத்தியில் சீயோனிஸம் சம்பந்தமாக ஊழியஞ் செய்வதற்குப் பாஸ்டர் ரஸல் ஏற்பாடு செய்தார் (யாக்கோபு எழுந்திருந்து - ஆதி. *32: 22*).

*8. ஆதி. 33:1-3* யாக்கோபு தன் கண்களை ஏறெடுத்து, இதோ, ஏசாவும் அவனோடேகூட நானூறு மனிதரும் வருகிறதைக் கண்டு, பிள்ளைகளை லேயாளிடத்திலும் ராகேலிடத்திலும் இரண்டு பணிவிடைக்காரிகளிடத்திலும் வெவ்வேறாகப் பிரித்துவைத்து, பணிவிடைக்காரிகளையும் அவர்கள் பிள்ளைகளையும் முதலிலும், லேயாளையும் அவள் பிள்ளைகளையும் இடையிலும், ராகேலையும் யோசேப்பையும் கடையிலும் நிறுத்தி: தான் அவர்களுக்கு முன்னாக நடந்து போய், ஏழுவிசை தரைமட்டும் குனிந்து வணங்கி, தன் சகோதரன் கிட்டச் சேர்ந்தான். … *1910*-ம் வருடத்தின் ஜூன் மாத தொடக்கத்தில் பாஸ்டர் ரஸல் ஐரோப்பாவில் பில்கிரீமாகச் செய்த பிரயாணத்திலிருந்து திரும்ப வந்த பிறகு, யூதர்களுக்கென்று விசேஷமாக பிரகடனம் பண்ணப்பட்ட கூடுகைகளில் பாஸ்டர் ரஸல் மற்றும் யூதர்களின் சந்திப்பு நடைபெற்றது. இந்த சந்திப்பு பல வருடங்களுக்கு நீடித்தது. பல வகைகளாகவும் பல பிரிவுகளாகவும் உள்ள கிறிஸ்தவர்களையும் கிறிஸ்தவ போதனைகளையும் குறித்து யூதர்களுக்குத் தெரிவிக்கும்படிக்குப் பாஸ்டர் ரஸல் அவருடைய பிரசங்கங்களை முதலாவது ஆயத்தம் செய்தார் (வெவ்வேறாகப் பிரித்து வைத்து). அதற்குப் பிறகு மிகக் குறைவான மதப்பிரிவு பற்றுடையவர்களையும் அவர்களுடைய போதனைகளையும் முதலில் தெரிவித்தார் (பணிவிடைக்காரிகளையும் அவர்கள் பிள்ளைகளையும் முதலில் … நிறுத்தி). மிக அதிக மதப்பிரிவு பற்றுடையவைகளை அடுத்ததாகத் தெரிவித்தார் (லேயாளையும் அவளுடைய பிள்ளைகளையும்…. நிறுத்தி). உண்மையான கிறிஸ்தவர்களைக் குறித்தும் கடைசியாகத் தெரிவித்தார் (ராகேலையும் யோசேப்பையும் கடையில் நிறுத்தி).அவருடைய கட்டுரைகளை ஆயத்தம் செய்தபிறகு, அவருடைய யூத அவையோரிடம் மிகுந்த மரியாதையுடன் செயல்பட்டு அவர்களுடைய கவனத்தைக் கவரும் விதத்தில் அவருடைய நோக்கத்தை அவர்களுக்குத் தெரிவித்தார் (முன்னாக நடந்து போய்…. தரை மட்டும் குனிந்து வணங்கி தன் சகோதரன் கிட்டச் சேர்ந்தான்).

*9. ஆதி. 33:4,5* அப்பொழுது ஏசா எதிர்கொண்டு ஓடிவந்து, அவனைத் தழுவி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்; இருவரும் அழுதார்கள். அவன் தன் கண்களை ஏறெடுத்து, ஸ்திரீகளையும் பிள்ளைகளையும் கண்டு: உன்னோடிருக்கிற இவர்கள் யார்? என்றான். அதற்கு அவன்: தேவன் உமது அடியானுக்கு அருளின பிள்ளைகள் என்றான். பாஸ்டர் ரஸலின் கனிவான நடத்தை யூதர்களின் இருதயத்தைக்

கவர்ந்தது. அவர்களும் மிகுந்த அன்புடன் அவரிடம் செயல்பட்டார்கள் (ஏசா…. ஓடி வந்து, அவனைத் தழுவி …. கட்டிக் கொண்டு…. முத்தஞ் செய்தான்). ஏனென்றால் இவ்விதமான கபடமற்ற அன்புக்கு அவர்கள் பழக்கப் படாதிருந்ததால் அவ்வித நடத்தையை அவர்கள் எதிர் பார்க்கவில்லை. பெயர் சபையின் கிறிஸ்தவ ஊழியக் காரர்களிடமிருந்து அவர்கள் இவ்வித நடத்தையை இதற்கு முன் ஒருபோதும் அனுபவிக்காதிருந்தார்கள். கிறிஸ்தவ போதனைகளைக் குறித்தும் கிறிஸ்தவ விசுவாசிகளைக் குறித்தும் யூதர்களின் முதல் எண்ணம் வெறுப்பு நிறைந்த ஒன்றாக இருந்தது. ஆகையால் அவைகளைக் குறித்துப் பாஸ்டர் ரஸலிடம் கேள்வி களைக் கேட்டார்கள் (உன்னோடு இருக்கிற இவர்கள் யார்?).

*10.* *ஆதி. 33:6-8* அப்பொழுது பணிவிடைக்காரி களும் அவர்கள் பிள்ளைகளும் சேர்ந்துவந்து வணங்கி னார்கள். லேயாளும் அவள் பிள்ளைகளும் சேர்ந்துவந்து வணங்கினார்கள்; பின்பு யோசேப்பும் ராகேலும் சேர்ந்து வந்து வணங்கினார்கள். அப்பொழுது அவன்: எனக்கு எதிர்கொண்டுவந்த அந்த மந்தையெல்லாம் என்னத்துக்கு என்றான். அதற்கு அவன்: என் ஆண்டவனுடைய கண் களில் எனக்குத் தயவு கிடைக்கிறதற்கு என்றான். அப் போது பாஸ்டர் ரஸல் யூதர்களுக்கு மரியாதை செலுத்தும் விதத்தில், கனிவாகவும், அவர்களுடைய கவனத்தைக் கவரும் விதத்தில் சாதுரியமாகவும் *1* மற்றும் *2*-ம் வசனங் களில் குறிப்பிடப்பட்ட மூன்று வகுப்புகளைக் குறித்து அவர்களுக்குச் சொன்னார். “ஓவர் லேண்ட் மந்த்லி” பத்திரிக்கையில் வந்த முதல் ஐந்து கட்டுரைகளின் அர்த்தத்தைக் குறித்து அவர்கள் கேள்வி கேட்டபோது (அந்த மந்தைகளெல்லாம் என்னத்திற்கு), யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் சமாதானம் உண்டு பண்ணும் ஆசீர்வாதமான வெகுமதியாக (என் ஆண்டவரு டைய கண்களில் எனக்குத் தயவு கிடைக்கிறதற்கு) அவை கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதாகப் பாஸ்டர் ரஸல் கனிவாகப் பதிலளித்தார். கிறிஸ்தவர்கள் மற்றும் யூதர்களின் முக்கியமான நம்பிக்கைகள் ஒன்று மற்றொன் றோடு சம்பந்தப்பட்டவைகளாக இருந்தன என்றும் பதிலளித்தார்.

*11.* *ஆதி. 33:9-11* அதற்கு ஏசா: என் சகோதரனே, எனக்குப் போதுமானது உண்டு; உன்னுடையது உனக்கு இருக்கட்டும் என்றான். அதற்கு யாக்கோபு: அப்படி அல்ல, உம்முடைய கண்களில் எனக்குத் தயவு கிடைத்த தேயானால், என் வெகுமதியை என் கையிலிருந்து ஏற்றுக்கொள்ளும்; நீர் என்மேல் பிரியமானீர், நான் உம் முடைய முகத்தைக் கண்டது தேவனுடைய முகத்தைக் கண்டதுபோல இருக்கிறது. தேவன் எனக்கு அநுக்கிரகம் செய்திருக்கிறார்; வேண்டியதெல்லாம் எனக்கு உண்டு; ஆகையால் உமக்குக் கொண்டுவரப்பட்ட என் காணிக் கையை ஏற்றுக்கொள்ளும் என்று சொல்லி, அவனை வருந்திக் கேட்டுக்கொண்டான்; அப்பொழுது அவன் அதை ஏற்றுக்கொண்டான். இயல்பாகவே யூதர்கள் முதலில் இந்த சத்தியங்களின் வெகுமதியை மறுத்தார்கள் (உன்னுடையது உனக்கு இருக்கட்டும் என்றான்). அவர் களை இணங்கச் செய்வதற்கு பாஸ்டர் ரஸல் பெரிதும் முயன்ற பிறகு அவர்கள் அந்த சத்தியங்களை ஏற்றுக் கொண்டார்கள் (அவன் வருந்தி கேட்டுக் கொண்டான்; அப்போது அவன் அதை ஏற்றுக் கொண்டான்).

*12.* *ஆதி. 33:12-15* பின்பு அவன்: நாம் புறப் பட்டுப்போவோம் வா, நான் உனக்கு முன் நடப்பேன் என்றான். அதற்கு அவன்: பிள்ளைகள் இளம் பிள்ளைகள் என்றும், கறவையான ஆடுமாடுகள் என்னிடத்தில் இருக் கிறது என்றும் என் ஆண்டவனுக்குத் தெரியும்; அவை களை ஒரு நாளாவது துரிதமாய் ஓட்டினால், மந்தை யெல்லாம் மாண்டுபோம். என் ஆண்டவனாகிய நீர் உமது அடியானுக்கு முன்னே போம்; நான் சேயீருக்கு என் ஆண்டவனிடத்தில் வருமளவும், எனக்கு முன் நடக்கிற மந்தைகளின் கால்நடைக்கும் பிள்ளைகளின் கால்நடைக் கும் தக்கதாக, மெதுவாய் அவைகளை நடத்திக்கொண்டு வருகிறேன் என்றான். அப்பொழுது ஏசா: என்னிடத்தி லிருக்கிற ஜனங்களில் சிலரை நான் உன்னிடத்தில் நிறுத் திவிட்டுப் போகட்டுமா என்றான். அதற்கு அவன்: அது என்னத்திற்கு, என் ஆண்டவனுடைய கண்களில் எனக்குத் தயவுகிடைத்தால் மாத்திரம் போதும் என்றான். சத்திய ஜனங்கள் யூதர்களோடு இணைந்து சீயோனிஸத்திற்காக (*Zionism*) ஊழியஞ் செய்ய வேண்டுமென்ற ஆலோச னையை பல யூதர்கள் முன் வைத்தார்கள் (நாம் புறப் பட்டுப் போவோம் வா). சத்திய ஜனங்கள் யூதர்களோடு சேர வேண்டுமென்றும் யூதர்கள் சத்திய ஜனங்களோடு சேர வேண்டுமென்றும் சொன்னார்கள். “தேவனுடைய தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்கள்” என்ற தலைப்பின் கீழ் வந்த பன்னிரண்டு கட்டுரைகளின் தொகுப்பின் கடைசி இரண்டு கட்டுரைகளில் பாஸ்டர் ரஸல் அந்த ஆலோசனையைப் மறுத்தார் (நீர் உமது அடியானுக்கு முன்னே போம்… நான் மெதுவாய் அவைகளை நடத்திக் கொண்டு வருகிறேன்). அந்த இரு கட்டுரைகள் இவ் வாறாயிருந்தன: (1) யூதர்கள் தெய்வீக தயவிற்குத் திரும்பு வதற்குக் கிறிஸ்தவர்களாக ஆக வேண்டுமா? (2) யூதர்களும் கிறிஸ்தவர்களும் இணைய வேண்டுமா? யூதர் களும் சத்திய ஜனங்களும் நெருங்கிய ஐக்கியம் கொள்ள வேண்டுமென்றும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்ய வேண்டுமென்றும் அவர்கள் கொடுத்த ஆலோசனைகள் (என்னிடத்திலிருக்கிற ஜனங்களில் சிலரை நான் உன் னிடத்தில் நிறுத்திவிட்டுப் போகட்டுமா என்றான்) எல்லா வற்றையும் பாஸ்டர் ரஸல் மறுத்தார் (அது என்னத் திற்கு). பாஸ்டர் ரஸல் பல வருட காலத்திற்குச் சீயோ னிஸம் பற்றிய செய்தியைப் பிரசங்கித்த பல்வேறு இடங்கள் எல்லாவற்றிலும், அவர் யூதர்களைச் சந்திக்கும் போதெல்லாம் இதே காரியத்தை வெளிப்படுத்தினார்.

*13.* சத்திய ஊழியத்தை விளம்பரப்படுத்தும் நிர்வாகியாகப் பாஸ்டர் ரஸல், டிரிஸ்கால் (*Br. Driscoll*) என்ற சகோதரரை நியமித்திருந்தார். அவர் மூலமாகப் பாஸ்டர் ரஸல், பாஸ்டர் ஜான்சனை அணுகி, சீயோனிஸம் ஊழியத்தின் பொறுப்பை ஏற்றுக் கொள்ள அவரிடம் கேட்டார். இது பாஸ்டர் ரஸல் மேலுள்ள பாரமான சுமை யைச் சற்று குறைக்கும் என்று அவரிடம் சொன்னார். ஆனால் முற்காலத்தில் யூதர்களோடு பாஸ்டர் ஜான்சனுக் கிருந்த தொடர்பைக் குறித்து யூதர்களுக்குத் தெரிய வந்தால், அது அந்த ஊழியத்திற்குப் பெரிய இடையூறாக இருக்கும் என்று பாஸ்டர் ஜான்சன் சுட்டிக்காட்டினார். பாஸ்டர் ஜான்சன் இந்த ஊழியத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்த நிலையில் ஈடுபட்டால், அவருக்கு யூதர்களோடு முற்காலத்திலிருந்த தொடர்பு அவர்களுக்கு நிச்சயமாகத் தெரியவரும் என்று சொன்னார். இவைகளைக் கருத்தில் கொண்டு பாஸ்டர் ரஸலும் அதை விட்டுவிட்டார். ஆகை யால் பாஸ்டர் ஜான்சன் சீயோனிஸம் பற்றிய சில பிரசங்கங்களை யூதர்களுக்குக் கொடுத்தாலும், அதிக விளம்பரத்துடன் அதைச் செய்யவில்லை. ஆகையால் நிஜ நிறைவேறுதலான யாக்கோபு மற்றும் ஏசாவின் சந்திப்பில் பாஸ்டர் ஜான்சன் முக்கியமான பங்கை வகிக்கவில்லை. இந்த சிலாக்கியம் கிட்டத்தட்ட முழுமையாகப் பாஸ்டர்

ரஸலுக்குரியதாக இருந்தது. அதாவது அதைப் பற்றிய எழுத்துக்கள் மற்றும் பிரசங்கங்கள் எல்லாம் பாஸ்டர் ரஸலின் மூலம் கொடுக்கப்பட்டன.

## யாக்கோபுக்கு உண்டான பயம்

*14.* இந்த ஊழியத்தில் பாஸ்டர் ஜான்சனுக் கிருந்த பங்கானது, சீயோனிஸம் சம்பந்தமாக அவர் பட்ட பாடுகளில் அடங்கியுள்ளது. அது இவ்வாறாயிருந்தது: சீயோனிஸத்தைக் குறித்து யூதர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதற்குப் பாஸ்டர் ரஸல் செய்த முதல் முயற்சி களுக்குப் பிறகு, யூதர்கள் அவருடைய ஊழியத்திற்கு விரோதமாகச் செயல்படுகிறார்கள் என்று பாஸ்டர் ஜான்சன் கேள்விப்பட்டவுடனே, அவர் மிகவும் பயந்து வியாகுலப்பட்டார் (ஆதி 32:7). ஏனென்றால் யூதர்களோடு முற்காலத்தில் அவருக்கிருந்த தொடர்பைக் குறித்து அவர் களுக்குத் தெரிய வந்தால் (அடுத்து வரும் கட்டுரையை காண்க), யூதர்களைக் கிறிஸ்தவர்களாக மாற்றுவதற்குப் பாஸ்டர் ரஸல் புது வழிகளைப் பயன் படுத்துகிறார் என்று அவர்கள் எண்ணக்கூடும். இது நிச்சயமாக அந்த ஊழியத்திற்குத் தீங்கு விளைவிக்கும்.

*15.* *1910*-ம் வருடத்தின் மே மாதத்தில் *27-29*-ம் தேதி வரை பாஸ்டர் ஜான்சன் போர்ட்லேண்ட் *(Portland)* என்ற இடத்திற்குப் பில்கிரீமாக ஊழியஞ் செய்வதற்கு இரண்டாம் முறை செல்ல வேண்டியதாயிருந்தது. அப்போது பாஸ்டர் ஜான்சனின் இந்த வியாகுலம் பெரிதும் அதிகரித்தது. ஏனென்றால் அவ்விடத்திலுள்ள சத்திய சகோதரர்கள் போர்ட் லேண்டிலுள்ள யூதர்களின் மத்தியில் பெரிதும் விளம்பரப்படுத்தப்பட்ட ஒரு கூடுகை யில் பாஸ்டர் ஜான்சன் யூதர்களுக்குப் பிரசங்கம் செய்ய வேண்டுமென்று திட்டமிட்டார்கள். அதற்காகப், பாஸ்டர் ஜான்சனுக்கு முற்காலத்தில் யூதர்களோடிருந்த தொடர் பையும் விளம்பரப்படுத்த ஆலோசனை பண்ணினார்கள். இவ்விதமான விளம்பரம் சீயோனிஸம் சம்பந்தமாகச் சத்திய ஜனங்கள் செய்யும் முழு ஊழியம் முழுவதற்கும் தீங்கு விளைவிப்பதாக இருப்பதால், அவ்வாறு விளம் பரப்படுத்த வேண்டாமென்று அவர் ஆலோசனை கூறினார். அவர் போர்ட்லேண்டில் ஏற்கனவே கொடுத் திருந்த பொது பிரசங்கங்களுக்கான விளம்பரங் களில் யூதர்களோடு முற்காலத்தில் அவருக்கிருந்த தொடர்பு தெரிவிக்கப்பட்டிருந்தது என்று அவர் அறிந்தார். அதி னால் அவர் பெரிதும் வியாகுலப்பட்டு, சீயோனிஸம் பற்றிய கூடுகையில் பேசுவதற்கு அவரை அல்லாமல் மற்றொரு பில்கிரீம் சகோதரரை உபயோகிக்க வேண்டு மென்று அவர்களுக்கு நேர்மையாக ஆலோசனை கூறி னார்.

*16.* இந்த அனுபவமானது சத்திய ஊழியத்தோடு அவருக்கிருந்த தொடர்பு சம்பந்தமாகவும், அக்காலத்தில் அதிகரித்துக் கொண்டிருந்த சீயோனிஸம் ஊழியத்தின் மேலிருக்கும் தாக்கம் சம்பந்தமாகவும் பாஸ்டர் ஜான்சனின் பயத்தையும் வியாகுலத்தையும் அதிகரிக்கச் செய்தது. அதினால் அவர் பல வாரங்களுக்குக் கர்த்தரிடம் மிகுந்த ஊக்கத்துடன் ஜெபம் பண்ணினார். யூதர்களோடு முற்காலத்தில் அவருக்கிருந்த தொடர்புகள் அந்த ஊழியத்திற்கு இடையூறாகவும் தடையாகவும் இருக்கக் கூடாது என்று தேவனிடம் மன்றாடினார். அக்காலத்தில் அதை அவர் உணரவில்லையென்றாலும், ஆதி. *32:9-12* வரையுள்ள வசனங்களிலுள்ள அதே சிந்தனைகள் அவர் அப்போது செய்த ஜெபத்திலும் இருந்தன. அவருடைய பயமும் வியாகுலமும் பல வாரங்களுக்கு நீடித்தது. அவர் மனரீதியாக முற்றிலும் களைத்துப்போனார். இந்த களைப் பானது அவரை யூதர்களுக்குச் செய்யும் ஊழியத் திலிருந்து அவரை நிச்சயமாக நீக்கிவிடுமென்று எண்ணி னதால் அவருடைய மனவியாகுலம் நீங்கியது. ஆதி *32:13-23* வரையுள்ள வசனங்களிலுள்ள யாக்கோபின் செயல் களின் நிஜ நிறைவேறுதல் பாஸ்டர் ரஸலின் செயல்களில் மட்டுமே காணப்பட்டது. ஆனால் ஆதி *32:24-32* வரை யுள்ள வசனங்களின் நிஜ நிறைவேறுதல் பாஸ்டர் ஜான்சனின் அனுபவங்களில் காணப்பட்டது.

## யாக்கோபு கர்த்தருடன் போராடுவது

*17.* ஆதி. *32:24,25* <u>யாக்கோபு பிந்தித் தனித்திருந் தான்; அப்பொழுது ஒரு புருஷன் பொழுது விடியுமளவும் அவனுடனே போராடி, அவனை மேற்கொள்ளாததைக் கண்டு, அவனுடைய தொடைச்சந்தைத் தொட்டார்; அதி னால் அவருடனே போராடுகையில் யாக்கோபின் தொடைச்சந்து சுளுக்கிற்று</u>. பாஸ்டர் ஜான்சனின் வியாகுலமானது ஆதி. *32:24-32* வரையுள்ள வசனங்களில் சித்தரிக்கப்பட்டிருக்கிற கடும் போராட்டத்தின் அனுபவத்திற்கு அவரை உட்படுத்தியது. சீயோனிஸம் ஊழியத்தில் ஒரு பிரசங்கியாராக அவர் பங்கு கொள்வ தற்கு ஆதரவாகவும் எதிராகவுமுள்ள காரணங்களைக் குறித்து அவருடைய மனதில் நடந்த விவாதமே இந்தப் போராட்டமாக இருந்தது. இந்த விவாதம் அவருடைய மனதில் நடந்த காரியமாக மட்டுமே இருந்தது, வார்த்தை யின் மூலம் நடந்த ஒன்றல்ல. இந்த வேலையில் அவர் முக்கியமான பங்கை வகித்தால், யூதர்களோடு அவருக்கு முற்காலத்திலிருந்த தொடர்புகள் அந்த ஊழியத்தைச் சேதப்படுத்தும் என்று அவர் தன் மனதில் எதிர்ப்பை தெரிவித்த போது, கர்த்தர் அதைப் பார்த்துக் கொண்டு மாற்றி அமைப்பார் என்று அவரிடத்தில் விசுவாச உறுதி யாயிரு என்ற பதில் அளிக்கப்பட்டது. அதற்கு, நாம் ஏதேனுமொரு பேராபத்தை விளைவிக்கும்படிக் கர்த் தரைப் பரீட்சை பார்த்து “உப்பரிகையிலிருந்து” தாழ குதிப்பது கர்த்தருக்குப் பிரியமான காரியமல்ல என்று பாஸ்டர் ஜான்சன் பதிலளித்தார். இந்த வாத விவாதம் அவருடைய மனதில் பல வாரங்களுக்கு நீடித்தது. அதை பல கண்ணோட்டங்களிலிருந்து விவாதித்து, சத்தியத் திற்கும் பகுத்தறிவுக்கும் இணக்கமாக இருப்பதாக அவருக்குத் தோன்றின பல வகையான பதில்களை அவர் தனது மனதிலே தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருந் தார். இந்த விவாதம் அவர் மனரீதியாக முற்றிலும் களைத்துப் போகும் வரையிலும் அதற்குஜ் கொஞ்சம் காலத்திற்குப் பிறகும் நீடித்தது. அவர் மனரீதியாக முற்றிலும் களைத்ததற்கு இந்த விவாதமும் ஒரு காரண மாக இருந்தது. பாஸ்டர் ஜான்சன் அவருடைய நிலை யிலே உறுதியாக நின்றார் *[அவனை மேற்கொள்ளாத தைக் கண்டு]*.

*18.* கர்த்தருடைய ஊழியத்திற்குத் தீங்குண்டாகு மென்று பாஸ்டர் ஜான்சன் நிச்சயமாக அறிந்திருந்த போதிலும் மிக உயர்வாக மதிக்கப்பட்டதும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததுமான இந்த ஊழியத்திற்குள் செல்லும்படி வற்புறுத்தப்பட இடங்கொடுப்பாரா இல்லையா என்று காணத் தேவன் அவரைப் பரீட்சித்துக் கொண்டிருந்தார். கர்த்தருடைய ஊழியத்திற்குத் தீங் குண்டாகுமென்று அவர் உறுதியாக நம்பினதால், அந்த ஊழியத்திற்குள் செல்லும்படி வற்புறுத்தப்படாமல் அதை எதிர்த்துப் பிடிவாதமாக நின்றார். அக்காலத்தில் அவர் அந்த காரியம் சம்பந்தப்பட்ட கொள்கைகளை அலசி

ஆராய்ந்து கொண்டிருந்தார் என்று மட்டுமே அவர் எண்ணினார். அவர் அப்போது கர்த்தரோடு போராடிக் கொண்டிருந்தார் என்று முதலில் அறியாதிருந்தார். அவருடைய மூளை களைத்துப் போய் கொண்டிருக்கையில் அந்த விவாதம் உச்சநிலையை அடைந்தது. அந்த விவாதம் தொடர்ந்து கொண்டிருக்கையில் அவருடைய மூளை முற்றிலும் களைத்துப் போயிற்று (அவருடைய தொடைச் சந்தைத் தொட்டார்; அதினால் அவருடனே போராடு கையில் யாக்கோபின் தொடைச்சந்து சுளுக்கிற்று).

19. ஆதி. 32:26,27 அவர்: நான் போகட்டும், பொழுது விடிகிறது என்றார். அதற்கு அவன்: நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன் என்றான். அவர்: உன் பேர் என்ன என்று கேட்டார்; யாக்கோபு என்றான். பாஸ்டர் ஜான்சன் மனரீதியாக முற்றிலும் களைத்துப் போன பிறகும் அந்த விவாதம் தொடர்ந்தது. அவர் ஊழியத்தில் ஈடுபடக் கூடாதென்ற வாதங்கள் அதில் ஈடுபட வேண்டுமென்ற வாதங்களை மேற் கொண்டன (நான் போகட்டும்). ஆனால் பாஸ்டர் ஜான்சன் தொடர்ந்து விவாதித்துக் கொண்டே இருந்தார். அந்த காரியத்தைப் பற்றிய முழுமையான தெளிவைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற நம்பிக்கையுடன் அதில் தொடர்ந்து ஈடுபட்டார். அவர் கர்த்தரோடு விவாதித்துக் கொண்டிருந்தார் என்று அப்போது உணர்ந்தார். இந்த போராட்டகாலம் முழுவதும் கர்த்தருடைய நோக்கங்களுக்குப் பாஸ்டர் ஜான்சனின் கீழ்ப்படிதலையும் உண்மைத்துவத்தையும் கர்த்தர் பரீட்சித்துக் கொண்டிருந்தார் என்று உணர்ந்தார். அப்போது கர்த்தரிடமிருந்து ஒரு ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதற்காக நீண்ட காலத்திற்கு விடாமுயற்சியுடன் மன்றாடினார் (நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன்).

20. அதற்குப்பிறகு பாஸ்டர் ஜான்சனின் மனதில் நடந்த உரையாடலைப் போல், “உன்னுடைய அலுவல் என்ன?” (உன் பெயர் என்ன?) என்ற கேள்வி அவருடைய மனதில் எழும்பினது. நான் ஒரு பில்கிரீமாகவும் (pilgrim) பொது மூப்பராகவும் (General elder) இருக்கிறேன் என்று தன் மனதிலே பதில் சொன்னார். பாஸ்டர் ரஸலுக்கு ஆதரவாக உண்மைத்துவத்துடன் நிற்பேன் என்றும் அந்த யோசனைக்குப் பதிலளித்தார். பாஸ்டர் ஜான்சன் அப்போது அதை அறியவில்லையென்றாலும், இந்த பதில் கர்த்தருடைய பார்வையில் பின்வரும் காரியத்தை அர்த்தப்படுத்தினது. ஒரு நட்சத்திர அங்கத்தினராகவும், “உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரனாகவும்” பாஸ்டர் ரஸலுக்கிருந்த அலுவலில் பாஸ்டர் ஜான்சன் அவருடைய விசேஷித்த உதவியாளராக (special helper) இருக்கிறார். இதற்குப் பதிமூன்று மாதங்களுக்கு முன்பு M L மெக்பேல் (M L Mc Phail) என்பவருடன் பாஸ்டர் ஜான்சனுக்கு நடந்த வாத விவாதத்தின் காலத்திலிருந்து பாஸ்டர் ஜான்சன் கர்த்தருடைய பார்வையில் அந்த ஊழியத்தை அடைந்தார்.

21. ஆதி. 32:28 அப்பொழுது அவர்: உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரயேல் என்னப்படும்; தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே என்றார். அலுவல் ரீதியாகப் பாஸ்டர் ஜான்சன் அடைந்த இந்தப் பதவி உயர்வை அவருக்குத் தெரிவிப்பதற்காகக் கர்த்தர் அவருடைய மனதைத் திறந்தார். தேவனுக்காகவும் சபைக்காகவும் போராடும் விசேஷித்த வெற்றி வீரனாகிய தலைவனாகத் தேவன் அவரை நியமித்ததை (இஸ்ரயேல், தேவனுடைய பிரபு அல்லது வீரன்) அவர் புரிந்து கொண்டார். அவருடைய இந்தப் போராட்டத்தில் அவர் வெற்றிகரமாகப் போராடினதினால் இந்த புரிந்து கொள்ளுதலைப் பெற்றுக் கொண்டார் (போராடி மேற்கொண்டாய்). பாஸ்டர் ஜான்சன் பின்வரும் காரியங்களை புரிந்து கொள்ளும்படிக்குக் கர்த்தர் அவருடைய மனதைத் திறந்தார்: அவருடைய சமீபகால அனுபவங்களை, அகோயின் குமாரனாகிய தோதோவின் மகனாகிய எலெயாசாரின் மூன்று வீரச் செயல்கள் அடையாளப்படுத்துகின்றன. பாஸ்டர் ஜான்சனுக்குக் கிடைத்த அலுவலின் உயர்வானது எலெயாசார் தாவீதின் படை வீரர்களின் இரண்டாம் வகுப்புக்குத் தலைவனாக நியமிக்கப்படுவதின் நிஜ நிறைவேறுதலாக இருக்கிறது. பாஸ்டர் ஜான்சன் ஆசாரியர்களின் தலைவனாக நியமிக்கப்படுவதென்பது ஆசாரியர்களின் இரண்டாம் வகுப்பின் தலைவனாக யெதாயா நியமிக்கப்படுவதின் நிஜ நிறைவேறுதலாயிருக்கிறது. மேலும் யாக்கோபு, எல்தாத், மேதாத், யோனத்தான் ஆகியவர்களின் நிஜ நிறைவேறுதலையும், மற்ற பல வேத வசனங்களையும் புரிந்து கொள்ளும்படித் தேவன் அவருக்குக் கிருபை செய்தார். இந்த சத்தியங்களைப் பற்றிய புரிந்துகொள்ளுதலைப் பாஸ்டர் ஜான்சனுக்குக் கொடுப்பதின் மூலம், அவர் பதவியில் உயர்த்தப்பட்டிருப்பதைக் கர்த்தர் அவருக்குத் தெரிவித்தார்.

22. ஆதி. 32:29,30 அப்பொழுது யாக்கோபு: உம்முடைய நாமத்தை எனக்கு அறிவிக்கவேண்டும் என்று கேட்டான்; அதற்கு அவர்: நீ என் நாமத்தைக் கேட்பானேன் என்று சொல்லி, அங்கே அவனை ஆசீர்வதித்தார். அப்பொழுது யாக்கோபு: நான் தேவனை முகமுகமாய்க் கண்டேன், உயிர் தப்பிப் பிழைத்தேன் என்று சொல்லி, அந்த ஸ்தலத்துக்கு பெனியேல் என்று பேரிட்டான். இந்த ஆசீர்வாதங்களெல்லாம் கர்த்தர் யாக்கோபை ஆசீர்வதிப்பதின் நிஜநிறைவேறுதலா யிருக்கின்றன (அங்கே அவனை ஆசீர்வதித்தார்).பாஸ்டர் ஜான்சனுக்கு இந்த நிஜ நிறைவேறுதல் தெளிவாகுவதற்கு முன்பு, அவரோடு விவாதித்துக் கொண்டிருக்கிறவர் (போராடிக் கொண்டிருக்கிறவர்) யாரென்று அறிந்து கொள்ள அவர் நீண்ட காலத்திற்குப் பிரயாசப்பட்டார் (உம்முடைய நாமத்தை எனக்கு அறிவிக்க வேண்டும்). ஏனென்றால் அவர் அந்த ஊழியத்தில் ஈடுபட வேண்டுமென்பதற்கு ஆதரவாக அவருடைய மனதில் உருவான சிந்தனைகள் அவருடையவைகள் அல்லவென்று அவர் உணர்ந்தார். அவருக்கு இந்த நிஜ நிறைவேறுதல் தெளிவாகும் வரை, அந்தக் கேள்விக்குப் பதிலைப் பெற்றுக் கொள்ளாதிருந்தார். மேலும் இவ்வித கேள்வி அவருடைய மனதில் ஏன் தோன்றுகிறது என்று அவர் சிந்தித்துக் கொண்டிருந்தார்.( நீ என் நாமத்தைக் கேட்பானேன்?)

23. ஆனால் இந்த அடையாளத்தின் புரிந்து கொள்ளுதலின் மூலம், மற்ற வழிகளிலும் பாஸ்டர் ஜான்சன் ஆசீர்வதிக்கப்பட்ட பிறகு, அவரோடு போராடினவர் கர்த்தராகிய யெஷுஆவாக இருந்தார் என்பதை அறிந்து கொண்டார். அப்போது அவர் இந்த அனுபவத்தின் செயல் எல்லையானது, மனரீதியாகக் கர்த்தரை முகமுகமாகக் காணும் நிலைக்குக் அவரைக் கொண்டு வந்ததென்று உணர்ந்தார் (பெனியேல், தேவனுடைய முகம்). ஏனென்றால் இந்த விவாதத்தில் அவர் மனரீதியாகத் தேவனை முகமுகமாகக் கண்டதைப் போலிருந்தது (நான் தேவனை முகமுகமாகக் கண்டேன்). இந்த அனுபவங்கள் எல்லாவற்றிலும் நடந்த ஆச்சரியமான காரியமென்னவென்றால், அவருடைய ஜீவன் முழுமையாக நொறுக்கப்படாதிருந்தது என்பதாகும். ஏனென்றால் இந்த அனுபவமும் எலெயாசாரின் நிஜ நிறைவேறுதலாக அவருக்கிருந்த மூன்று அனுபவங்களும் அவருடைய ஜீவ

சக்தியை வற்றிப் போகச் செய்தன ( உயிர் தப்பிப் பிழைத் தேன்).

*24.* ஆதி. 32:31 <u>அவன் பெனியேலைக் கடந்து போகையில், சூரியன் உதயமாயிற்று; அவன் தொடைச் சுளுக்கினாலே நொண்டி நொண்டி நடந்தான்</u>. எலெயா சாரின் மூன்று வீரச் செயல்களின் நிஜ நிறைவேறுதலாகப் பாஸ்டர் ஜான்சன் பெற்ற மூன்று அனுபவங்களில் அவரை முற்றிலும் களைப்படையச் செய்யும் கடினமான உழைப்புகளும் போராட்டங்களும் இருந்தன. இவைக ளெல்லாம் அவருடைய ஜீவ சக்தியைப் பெரிதளவில் வற்றிப்போகச் செய்தன. அதற்குக் கூடுதலாக இந்தப் போராட்டத்திலும் (யாக்கோபுக்கும் தேவதூதனுக்கும் இடையில் நடந்த போராட்டத்தின் நிஜ நிறைவேறுதல்) அவர் களைப்படைந்தார். இவைகளை எல்லாம் கருத்தில் கொள்ளும்போது, அவருடைய மூளை முற்றிலும் களைத் துப் போனது என்பதில் ஆச்சரியமில்லை. மாறாக அவர் உயிரோடு இருந்தார் என்பதே ஒரு பெரிய ஆச்சரியம்! ஆம் இந்த நான்கு அனுபவங்களும் அவருடைய மூளையை மிக தீவிரமாகப் பாதித்ததால், அவருடைய மனம் முற்றிலும் களைத்துப் போனது. அதினால் அவர் 3 ½ மாதங்களுக்குப் பில்கிரீம் ஊழியஞ் செய்யும் தகுதி யையும் இழந்தார். இந்த அனுபவத்திற்குப் பிறகு கொஞ்சம் காலத்திற்கு அவர் மனரீதியாகக் கடினமாக முயற்சி செய்யும் திராணி இல்லாதவராயிருந்தார். ஆம், இந்த அனுபவங்களுக்கு முன் அவருடைய மூளை அழுத் தத்தைச் சகிக்கக் கூடியதாக இருந்த அளவிற்கு, அதற் குப்பிறகு ஒருபோதும் இருந்ததில்லை (அவன் தொடை சுளுக்கினாலே நொண்டி நொண்டி நடந்தான்).

*25.* ஆதி. 32:32 <u>அவர் யாக்கோபுடைய தொடைச் சந்து நரம்பைத் தொட்டபடியால், இஸ்ரயேல் புத்திரர் இந்நாள்வரைக்கும் தொடைச்சந்து நரம்பைப் புசிக்கிற தில்லை</u>. பாஸ்டர் ஜான்சன் அடைந்த மனரீதியான களைப் பைக்குறித்துக் கேள்விப்பட்ட கிரீடத்தை இழந்தவர்கள், அவருடைய களைப்புக்குக் கொஞ்சம் காலத்திற்குப் பிறகு அவருக்குத் தெளிவாக்கப்பட்டிருந்த நிஜ நிறை வேறுதலுக்குரிய அனுபவங்களைப் பற்றிய அறிக்கையை இருதய பூர்வமாக ஏற்றுக் கொள்ளாதிருந்தார்கள். இது, யாக்கோபு நொண்டி நடக்க தொடங்கின பிறகு இஸ்ர யேலர்கள் இந்நாள் வரை தொடைச் சந்து நரம்பைப் புசிக்காததற்கு இணையாக இருக்கிறது. மேலே கொடுக் கப்பட்ட விளக்கம் உண்மை நிகழ்வான சம்பவங்களுக் கும், நிஜ நிறைவேறுதலின் சூழ்நிலை அமைப்புக்கும் இணக்கமாக இருந்தாலும் லேவியர்கள் (நிஜ நிறை வேறுதலான யாக்கோபின் புத்திரர்) அதை இருதய பூர்வமாக ஏற்றுக் கொள்ளாதிருந்தார்கள்.

★★★★★★★★★★★★★★★★★★★★

## பாஸ்டர் பவுல் *S. L.* ஜான்சனின் இளவயதில் யூதர்களோடு அவருக்கு இருந்த அனுபவங்கள்

***PT Dec 1950, p.182***

*1.* **பா**ஸ்டர் ஜான்சனின் தந்தை அமெரிக்கா வில் யூதர்களின் சமுதாயத்தில் மதரீதியாகப் பேர்பெற்ற வராக இருந்தார். டைட்டஸ்வில் *(Titusville)* என்ற இடத்திலுள்ள ஜெப ஆலயத்தின் தலைவராக இருந்தார். அவர் மற்ற இடங்களுக்குப் பிரயாணம் செய்யும்போது, அவ்விடங்களிலுள்ள யூத கூட்டங்களில் பிரசங்கம் செய்ய அழைக்கப்பட்டிருந்தார். பிற்காலத்தில் அவர் எந்தப் பட்டணத்தில் குடியிருந்தாலும் அந்தப் பட்டணத்தின் யூத ஜெப ஆலயத்தின் தலைவராகத் தேர்வு செய்யப்பட் டிருந்தார். பவுல் சிறுவராக இருந்தபோது, எபிரெய பாஷையில் கல்வி பயின்றார். அது அவருக்கு எதிர்காலத் தில் அவர் செய்யவிருந்த ஊழியத்திற்கு ஒரு சிறந்த பயிற்சியை அளித்தது. 1886-ம் வருடம், அக்டோபர் 15 அன்று யூத பாரம்பரியத்தின்படி "பார் மிட்ஸ்வா" (நியா - யப்பிரமாணத்தின் குமாரன் - *Bar Mitzvah - son of the commandment)* என்ற தகுதியையும் அடைந்தார். அவர் மற்ற பாடங்களிலும், விசேஷமாகச் சரித்திரத்திலும் அவர் தேர்ச்சி பெற்றார். அவர் 8 வயதுள்ளவராக இருந்த போது, தன்னுடைய தகப்பனின் உந்துதலினால் அமெரிக்காவின் சரித்திரத்தைப் பதிவு செய்யத் தொடங்கினார்.

*2.* அவருடைய தகப்பன் எபிரெய சமுதாயத்தில் பேர்பெற்றவராக இருந்ததால், அவருடைய பிள்ளை யாகிய பவுலுக்குப் பல பாடுகள் ஏற்பட்டன. அவர் 12 வயதுள்ளவராக இருந்தபோது, அவர் தாய் மரித்த பிறகு இந்த பாடுகள் அதிகரித்தன. அவர் தன் தாய்க்கு மிகப் பிரியமான பிள்ளையாக இருந்ததினாலும், அவரும் அவளைப் பெரிதும் நேசித்ததினாலும், அவள் 1886-ம் வருடம் ஜனவரி 4 அன்று இறந்தபோது, இளைஞனாகிய பவுல் பெரிதும் துயரப்பட்டார். அதற்குக் கொஞ்சக் காலத்திற்குப் பிறகு அவருடைய தகப்பன் மறுமணம் செய்துகொண்டார். இளைஞனாகிய பவுல் அதை அங்கீகரிக்கவில்லை. இறந்துபோன தன் தாய்க்காக அவர் கொண்டிருந்த அன்பினாலும், உண்மைத்துவத்தினாலும் குடும்பத்தில் பல முரண்பாடுகள் ஏற்பட்டன. அவருடைய குடும்பத்தார் அவரைத் துன்புறுத்தினார்கள். அவர் பெரி தும் அதைரியப்பட்டு, மனக்கலக்கமடைந்து, 1887-ம் வருடத்தில் பல முறை வீட்டை விட்டு ஓடிப்போனார்.

*3.* அவர் கடைசி முறை வீட்டைவிட்டு ஓடிப் போனபோது, மற்றொரு இளைஞனுடன் ஃபில- தெல்ஃபியாவிற்கு *(Philadelphia)* வந்து காலணிகளை மெருகேற்றும் வேலையில் ஈடுபட்டார். அங்கே அவர் யெஷுஆவின் பாடுகளை சித்தரிக்கும் ஒரு படத்தை முதல் முறையாகக் கண்டு, யெஷுஆவிடம் ஒத்துணர்வு கொண்டார். அதற்குக் கொஞ்சக் காலத்திற்குப் பிறகு ஒரு குப்பையில் ஒரு வேதாகமத்தைக் கண்டுபிடித்தார். அதை கொண்டு, மற்றொரு சிறுவனுடன் ஃபிலடெல்ஃபியா விலுள்ள மெதடிஸ்ட் சபையின் *(M.E. Church, Phil)* ஒரு ஆராதனை கூட்டத்தில் பங்குகொண்டார். அந்த பிரசங் கத்தை இளைஞனாகிய பவுலால் புரிந்துகொள்ள முடிய வில்லை. அதனால் பிரசங்கம் நடந்துகொண்டிருக்கையில் பவுல் தன் வேதாகமத்தை எடுத்துக்கொண்டு, அதைப் படிக்கத் தொடங்கினார். யோவா. 3:16-ம் வசனம் அவர் கவனத்தை ஈர்த்தது. "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என்ற வார்த்தைகளைத் தியானித்தபோது, யெஷுஆவின் மீது அன்பினாலும், ஒத்துணர்வினாலும் அவருடைய இருதயம் நிரப்பப்பட்டது. யெஷுஆவைத் தன் சொந்த ரட்சகராக ஏற்றுக்கொண்டு, தன் பாவங்களுக்காக மனந் திரும்பி, விசுவாசத்தினால் நியாயமாக்கப்பட்டார். இது 1887-ம் வருடம் டிசம்பர் 25 அன்று நிகழ்ந்தது. அந்த தேதியன்று அவர் பிரதிஷ்டை செய்து, ஆவியினால்

ஜெநிப்பிக்கப்பட்டதாகப் பாஸ்டர் ஜான்சன் நம்பினார்.

*4.* அதே நாளில் சாயங்காலத்தில் அவர் *Y.M.C.A*-ல் நடந்த ஒரு கூடுகையில் பங்குகொண்டு, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள தான் செய்த தீர்மானத்தை அவர்களுக்குத் தெரிவித்தார். அவருடைய அறிக்கையைக் கேட்டு, அவர் ஒரு யூதன் என்று அறிந்துகொண்டபோது, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள அவர் செய்த இந்த தீர்மானத்தைத் தன் பெற்றோருக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். ஆகையால், தான் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதையும், மெதடிஸ்ட் சபையில் *[Methodist Church]* சேர்ந்துகொண்டதையும் ஒரு கடிதத்தில் தன் பெற்றோருக்குத் தெரிவித்தார். பின்பு அவர் வீட்டிற்குத் திரும்ப வந்தபோது, அவருடைய தகப்பன் “நான் ஒரு மெதடிஸ்ட், ஆம், நான் ஒரு மெதடிஸ்ட்!” என்று ஏளனமாகச் சொல்வதைத் தவிர வேறெதனையும் சொல்லவில்லை. ஏனென்றால் அது ஓய்வு நாளாக இருந்தது, அதைப் பரிசுத்தக் குலைச்சலாக்க அவர் விரும்பவில்லை. ஆனால் ஓய்வு நாள் முடிந்த உடனே, அவர் பவுலை அழைத்து, “நீ ஏன் கிறிஸ்தவனானாய்?” என்று கேட்டார். “மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் கீழ்ப்படிவதற்காகவே” என்று பவுல் பதிலளித்தார். கிறிஸ்துவை மறுதலிக்கவும், திரும்ப “யெஹுதாவாக” *[Yehuda - யூதனாக]* மாறவும் அவரை வற்புறுத்த அவருடைய தகப்பன் முயன்றார். ஆனால் அது வீண் முயற்சியாகவே இருந்தது. இளைஞனாகிய பவுல் அந்த வற்புறுத்தலை உறுதியாக எதிர்த்தார். யெஷுஆ தனக்காக மரித்தார் என்ற திட நம்பிக்கையில் உறுதியாக இருந்தார். என்னதான் நேரிடினும் அவர் அதை உறுதியாகப் பற்றிக்கொள்ள தயாராக இருந்தார்.

*5.* அவர் உறுதியாக இந்த நிலையை எடுத்துக்கொண்டதால், அவர் திருத்த முடியாத அளவிற்குக் கேடுற்றவராக இருக்கிறார் என்று அவருடைய தகப்பன் தீர்மானித்து, மார்கான்சா *(Morganza)* என்ற இடத்திலுள்ள இளம் குற்றவாளிகளைச் சீர்திருத்துவதற்கு அவர்களைத் தண்டிக்கும் சிறைச்சாலைக்கு *(Reformatory)* அவரை *1889*-ம் வருடம் பிப்ரவரி *8*-ம் தேதியன்று அனுப்பிவிட்டார். கொடிய குற்றங்களுக்காக அங்கே சிறைப்படுத்தப்பட்டிருந்த மற்ற சிறுவர்களும், சிறைச்சாலையின் அதிகாரிகளும் அவரை மிக மோசமாக நடத்தினார்கள். அவர் கிறிஸ்துவை மறுதலித்தால் மட்டுமே அவரை அவ்விடத்திலிருந்து வெளியே கொண்டுவர அவருடைய தகப்பன் வாக்களித்தார். அவருடைய தகப்பன் எவ்வளவு முயன்றாலும், அந்த இளைஞன் யெஷுஆவை தன் சொந்த ரட்சகராகத் தைரியமாகப் பற்றிக்கொண்டு, அவருக்குத் தன்னை முழுமையாகப் பிரதிஷ்டை செய்தார். ஆனால் அக்காலத்தில் அவருக்குத் தெய்வீகத் திட்டத்தைப் பற்றிய சில தவறான கருத்துக்கள் இருந்தன. அக்காலத்தில் லூத்தரன் சபையைச் சேர்ந்த பாஸ்டர் குல்டெல் *(Pastor Kuldell)* என்பவர் அந்த சிறைச்சாலைக்கு அவ்வப்பொழுது வருவார். கிறிஸ்துவைத் தன் சொந்த ரட்சகராக ஏற்றுக்கொண்டதற்காக ஒரு எபிரெய இளைஞன் அங்கே சிறைபட்டிருப்பதைக் கேள்விப்பட்டார். அவர் வந்து அந்த இளைஞனுடன் பல முறை உரையாடினார். இது பவுலின் கிறிஸ்தவ வாழ்க்கையில் அவருக்குப் பெரிதும் உதவியது.

*6.* பவுல் விரைவில் அந்த சிறைச்சாலையின் ஒரு அதிகாரியின் தயவைப் பெற்று, அவ்விடத்திலிருந்து விடுவிக்கப்படுவதற்குத் தேவையான காரியங்களை நிறைவேற்றி, *1889*-ம் வருடம் ஜூலை *1*-ம் தேதியன்று அவ்விடத்தை விட்டு வெளியேறினார். அவருடைய தகப்பன் அவரைச் சட்டப்படி தண்டிப்பதற்கு அந்த சிறைச்சாலைக்கு அனுப்பிவிட்டதால், அந்த இளைஞனின் பொறுப்பாளியாக இருக்கும் உரிமையை இழந்துவிட்டார் (முதலில் அவருடைய தகப்பன் இதை அறியாதிருந்தார். அந்த சிறைச்சாலைக்குப் பவுலை திரும்ப அனுப்ப முயலும்போதுதான் அதை அறிந்துகொண்டு பெரிதும் சினமடைந்தார்). அரசாங்கமே அந்த இளைஞனுக்கு ஒரு பொறுப்பாளரை நியமித்தது.

*7.* அவர் *1889*-ம் வருடம் ஜூலை *14*-ம் தேதியன்று தன்னுடைய பிரதிஷ்டையின் பொருத்தனைகளைப் புதுப்பித்துக்கொண்டு ஞானஸ்நானம் பெற்று, வீட்டிற்குத் திரும்ப வந்தார். அவருடைய தகப்பன் அவரை ஏளனம் செய்து, *1889*-ம் வருடம் ஜூலை *15*-ம் தேதியன்று அவரை தன் குமாரனாக ஏற்க வெளிப்படையாக மறுத்தார். அவருக்காக ஒரு போலி இறுதிச் சடங்கையும் நடத்தினார். அலெகெனி *(Allegheny)* என்ற இடத்தில் அவருக்கு நியமிக்கப்பட்ட பொறுப்பாளரிடத்திற்கு அனுப்பப்பட்டார். அங்கே அவர் கொஞ்சக் காலத்திற்கு ஒரு காலணி கடையில் வேலை செய்தார். அப்பொழுது அவர் பாஸ்டர் ரஸலின் பைபிள் ஹவுஸிற்கு மிக அருகில் இருந்தாலும், கர்த்தர் அக்காலத்தில் அவருக்கு நிகழ்கால சத்தியத்தைக் கொடுக்கவில்லை. இளைஞனாகிய ஜான்சனுக்குக் கர்த்தருடைய பரிபாலனம் வேறுவிதமாக இருந்தது. அதாவது அவர் பிற்காலத்தில் செய்யப்போகிற மேன்மையான ஊழியத்திற்காக அவரைத் தகுதிப்படுத்துவதற்கு அவருக்குத் தேவையான கல்வியை அவர் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது தேவனுடைய திட்டமாக இருந்தது. பல்வேறு கல்வித்துறைகளில் அந்த சிறந்த கல்வியைப் பெற்றுக்கொள்ளாதிருந்தால், “உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரரின்” மூலம் கர்த்தர் கொடுத்த சத்தியத்திற்கு ஆதரவாக ஊழியம் செய்ய எவ்வாறு தகுதி பெற்றிருக்கக் கூடும்? மேலும் கிரேக்க மற்றும் எபிரெய பாஷையில் அவ்வாறு தேர்ச்சி பெறாதிருந்தால், சத்தியத்திற்கு எதிராகச் செய்யப்பட்ட தாக்குதல்கள் எல்லாவற்றையும் அவர் எவ்வாறு திறமையாக மறுத்திருக்கக் கூடும்?

★★★★★★★★★★★★★★★★★★★★

# கிறிஸ்தவனின் விடுமுறை நாட்கள்

***BS# 365, August 1966, pp. 58-60***

“அவர் அவர்களை நோக்கி:
வனாந்தரமான *[solitary - தனிமையான]* ஓரிடத்தில்
தனித்துச் சற்றே இளைப்பாறும்படி
போவோம் வாருங்கள் என்றார்.”
*(மாற். 6:31)*

*1.* **தே**வனுடைய ஜனங்கள், அமைதியில்லாமல் இங்கும் அங்கும் பதற்றமாக ஓடிக்கொண்டிருக்கிற திரளான ஜனங்களிடமிருந்து அவ்வப்போது பிரிந்து சென்று, நம்முடைய கர்த்தருடனும், அவர்களை போலவே அருமையான விசுவாசத்தைப் பெற்ற மற்றவர்களுடனும், அல்லது கர்த்தருடன் தனிமையிலும் அமைதியாக இளைப்பாற நாட வேண்டும். கர்த்தர் தம்முடைய உண்மையான ஜனங்களுடன் எப்பொழுதுமே இருக்கிறார் என்பது உண்மை. “இதோ, யுகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட

இருக்கிறேன்" *(மத். 28:20)* என்று அவர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். அவர்கள் எந்தச் சூழ்நிலைகளில் இருந்தாலும், அவர் அவர்களோடு இருப்பார். சரீரரீதியாக அவர் அவர்களோடு இருப்பார் என்பதை இது அர்த்தப் படுத்தாது. மாறாக அவருடைய விசேஷித்த தயவு, ஐக்கியம், ஒத்துணர்வு, அன்பு, அக்கறை, வழிநடத்துதல், கட்டுப்பாடு, பாதுகாப்பு, சீர்திருத்துதல், உற்சாகமளித்தல், ஆலோசனை, ஒத்துழைப்பு ஆகியவைகள் எல்லா சூழ் நிலைகளிலும் அவர்களோடு இருக்கும். எப்பக்கத்திலு முள்ள குழப்பமான மற்றும் உபத்திரவமான நிலைமை களின் மத்தியிலும் கூட, "உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிற படியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர்" என்ற நிச்சயம் அவருடைய உண்மையான ஜனங்கள் அனைவருக்கும் அளிக்கப்படுகிறது *(ஏசா. 26: 3* வசனத்தை *சங். 119: 165; யோவா. 14: 27; 16: 33; பிலி. 4: 7* வசனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்).

*2.* இருந்தாலும், பல கிறிஸ்தவர்கள் அன்றாட வாழ்க்கையின் கவலைகளினால் கிட்டத்தட்ட எப்பொழு துமே பாரம் சுமந்துகொண்டிருக்கிறார்கள். மேலும் அன்றாட வாழ்க்கையில் அவர்கள் தொடர்புகொள்கிற சிலராலோ அல்லது எல்லாராலோ தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறார்கள். சில நேரங்களில் துன்புறுத்தவும் படுகிறார்கள். ஆகையால் அவ்வப்போது ஒரு தற்காலிக மான மாற்றத்திற்காகவும், ஓய்வுக்காகவும் இவைகள் எல்லாவற்றிலிருந்தும் தூரமாகச் செல்ல விரும்பக்கூடிய வர்களாக இருக்கிறார்கள். சங்கீதக்காரனைப் போல அவர்களும் இவ்வாறு சொல்லக்கூடியவர்களாக இருக் கிறார்கள் *(சங். 55:6-8)*: "ஆ, எனக்குப் புறாவைப்போல் சிறகுகள் இருந்தால், நான் பறந்துபோய் இளைப்பாறு வேன். நான் தூரத்தில் அலைந்து திரிந்து வனாந்தரத்தில் தங்கியிருப்பேன். பெருங்காற்றுக்கும் புசலுக்கும் தப்பத் தீவிரித்துக்கொள்ளுவேன்."

*3.* இங்கே நாம் சில காரியங்களைக் கவனிக்க வேண்டும்: ஒரு மலரை விட்டு மற்றொரு மலருக்கு வேக மாகப் பறக்கிற வண்ணத்துப்பூச்சியின் சிறகுகளைப் போன்ற சிறகுகளைச் சங்கீதக்காரன் விரும்பவில்லை. அப்படிப்பட்டவர்கள் "பலவித காற்றினாலே அலை களைப்போல அடிபட்டு அலைகிற" குழந்தைகளாகவும் *(எபே. 4:14)*, நிலையற்றவர்களாகவும், உறுதியற்றவர் களாகவும் இருக்கிறார்கள். அவ்வப்போது ஏறுமாறாக இங்கும் அங்கும் தாவுகிற வெட்டுக்கிளியின் சிறகு களைப் போன்ற சிறகுகளையும் அவர் விரும்பவில்லை. அப்படிப்பட்டவர்கள் மதரீதியான காரியங்களில் ஒரே சீராக முன்னேற்றம் அடைவதற்குப் பதிலாக, அவ்வப் போது பரபரப்பாகச் செயல்படுகிறவர்களாக இருக்கிறார் கள். ஒருபோதும் பறக்காமல், தரையில் மட்டுமே ஓடும் நெருப்புக்கோழியின் சிறகுகளைப் போன்ற சிறகுகளை யும் அவர் விரும்பவில்லை. அப்படிப்பட்டவர்கள் மேலான, பரத்துக்குரிய காரியங்களை ஒருபோதும் நாடா மல், இம்மைக்குரிய காரியங்களை நாடுகிற மாய்மாலக் காரர்களாகவும், "காணப்படுகிறவைகளை … நாடுபவர் களாகவும்," "பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறவர் களாகவும்" இருக்கிறார்கள் *(2கொரி. 4:17; பிலி: 3:19)*. கர்த்தருடைய உண்மையான ஜனங்களோ, "பூமியிலுள்ள வைகளை" நாடாமல், மேலானவைகளையே தேடுவார் கள் *(கொலோ. 3:1,2)*. அவர்கள் தேவனுடைய தயவைப் பெற்றுக்கொள்வதற்காக உலக அங்கீகாரத்தை விருப்பத் துடனும், மகிழ்ச்சியுடனும் விட்டுவிடுகிறார்கள். நித்திய ராஜ்யத்தில் அவர்களுக்குரிய நம்பிக்கைகளை அடை வதற்காக இப்பொழுதிருக்கிற பொல்லாத உலகத்தின் ஆர்வங்களை விருப்பத்துடனும், மகிழ்ச்சியுடனும் விட்டு விடுகிறார்கள்.

*4.* சங்கீதக்காரன் புறாவைப்போல் சிறகுகளை விரும்புகிறார். அந்த புறா போக வேண்டிய இடத்தை நோக்கி ஒரே சீராகப் பறக்க அந்த சிறகுகள் அதற்கு உதவும். உண்மையான கிறிஸ்தவனின் காரியமும் அவ் வாறே இருக்க வேண்டும். நித்திய ராஜ்யத்துக்குட்படும் பரிபூரணமான பிரவேசத்தை நோக்கி அவன் ஒரே சீராக முன்னேற வேண்டும் *(2 பேது.1:5-11)*. அவன் இவ்வாறு முன்னேறுவதை நிறுத்தவும், அவனுடைய இலக்கை சென்றடைவதைத் தடுக்கவும் சாத்தானும், அவனுடைய ஊழியக்காரர்களும் நாடுகிறார்கள். சாத்தான் உலகத் தாருக்கு விசேஷமாகத் தொந்தரவு கொடுக்க மாட்டான். ஏனெனில் அவர்கள் ஏற்கனவே அவனுடைய அதிகாரத் தின் கீழ் இருக்கிறார்கள். பொதுவாகப் புறா தான் வேட்டையாடிக் கொல்லப்படும். சாதாரண காக்கை விட்டுவிடப்படும். பொதுவாக மற்ற பறவைகளைக் கொன்று தின்னும் பறவைகளுக்காகக் கண்ணிகள் வைக் கப்படுவதில்லை. ஆனால் ஒருபோதும் தீங்கு செய்ய எண்ணாத, ஒருபோதும் தீங்கு செய்யாத புறா போன்ற கபடமற்ற பறவைகளுக்காகத்தான் கண்ணிகள் வைக்கப் படுகின்றன. "புறாக்களைப்போலக் கபடற்றவர் களாக" *(மத். 10: 16)* இருக்கிற கர்த்தருடைய ஜனங் களைத்தான் கர்த்தர் வேடனுடைய கண்ணிக்குத் தப்பு விப்பார், அதாவது சாத்தானிடமிருந்து விடுவிப்பார் *(சங். 91:3)*.

*5.* வாழ்க்கையின் அன்றாட வேலையின் சூழ் நிலைகளிலிருந்தும், கவலைகளிலிருந்தும் தற்காலிகமாக விடுமுறை அல்லது ஓய்வு எடுப்பது என்பது, பொதுவாக மனரீதியான மற்றும் சரீரரீதியான அதிக ஓய்வையும் இளைப்பாறுதலையும் அளிக்கும். ஆனால் அவ்வித நாட் களிலும் கர்த்தருடைய ஜனங்கள் கர்த்தருக்குள் தொடர்ந்து இளைப்பாறுவதை மறந்துவிடக் கூடாது. கூடுமானால் இவ்விதமான நாட்களில் அதைப் பெருகச் செய்ய வேண்டும். "நீதியின் கிரியை சமாதானமும், நீதி யின் பலன் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாம். என் ஜனம் சமாதான தாபரங்களிலும், நிலையான வாச ஸ்தலங்களிலும், அமைதியாய்த் தங்கும் இடங்களிலும் குடியிருக்கும்" *(ஏசா. 32: 17, 18)*.

*6.* தேவனுக்கு நம்முடைய கவனத்தை நேரடி யாகச் செலுத்துவதற்கோ, அவருடைய துதிகளைப் பாடு வதற்கோ கல் கட்டடங்களோ, தேவாலய கோபுரங்களோ, நேர்த்தியான இசைக்கருவிகளோ, அலங்காரமான ஆடை களோ, சிலுவையின் சின்னங்களோ, மதரீதியான படங்களோ, மற்ற பொருட்களோ அவசியம் என்று எண்ணுவது தவறாகும். நம்மைச் சுற்றி நாம் எங்கு நோக்கி பார்த்தாலும் நம்முடைய மா உன்னத சிருஷ்டிகரின் கைவேலையின் அற்புதங்களைக் காண்கிறோம், இயற்கை முழுவதும் அவருடைய துதி பாடல்களைப் பாடுகிறது. சோர்ந்துபோன நம்முடைய சரீரங்களை இளைப்பாற செய்வதற்குச் சொகுசான சாய்விருக்கைகள் நமக்குத் தேவை இல்லை. புல்லின்மேல் உட்கார்ந்து, யெஷுஆ வின் வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தை களைக் கேட்ட ஐயாயிரம் பேர்களைப் போல *(மத். 14: 19-21; லூக். 4: 22)*, நாமும் திறந்தவெளியில் இருந்தாலும் கர்த்தர் நம்மிடம் பேசுவதை நாம் கேட்கக்கூடும். அவர் அப்பொழுது பேசினதை விட இன்னும் சிறந்த வழிகளில் இப்பொழுது நம்மிடம் பேசுகிறார்.

# இரு வகையான வெளிப்பாடுகள்

*7.* தேவன் நம்மிடம் இரு வகையான வெளிப்பாடுகளின் மூலம் பேசுகிறார்: *1)* அவருடைய சிருஷ்டிப்பின் கைவேலைப்பாடு அல்லது இயற்கை, மற்றும் *2)* தெய்வீக அகத்தூண்டுதலினால் எழுதப்பட்ட அவருடைய சத்திய வார்த்தை.மனிதன் இயற்கையைக் கவனித்து, பகுத்தறிந்து நிதானிக்கும்போது, அது அவனுக்குச் சில காரியங்களை வெளிப்படுத்தும். நட்சத்திரங்கள் நிறைந்த வானத்தையும், சூரியனையும், சந்திரனையும், பூமியையும், ஆகாயத்தையும், பகலும் இரவும் அடுத்தடுத்ததாக வருவதையும், பருவங்கள் அடுத்தடுத்ததாக மாறுவதையும், இயற்கையின் சக்திகளையும், அவைகளிலுள்ள பிரமாணங்களையும், ஒழுங்கையும் மனிதன் கவனித்து, அவைகளைக் குறித்துச் சிந்திக்கும்போது, ஞானமான, நீதியான, அன்பான மற்றும் வல்லமையுள்ள ஒரு தேவன் நிச்சயமாக இருக்க வேண்டும் என்று பகுத்தறிந்து நிதானிப்பான். அவரே இவைகளைச் சிருஷ்டித்து, நன்மைக்கு ஏதுவாக அவைகளை அமைத்து, சில பிரமாணங்களுக்கு இணக்கமான சக்திகளை உபயோகித்து அவைகளின் ஒழுங்கை நீடிக்கச் செய்கிறார் என்றும் அவன் பகுத்தறிந்து நிதானிப்பான்.

*8.* மேலும் தன்னுடைய சொந்த பண்புகளைக் குறித்தும், தன்னுடைய சரீர, மன, ஒழுக்க மற்றும் மதரீதியான இயல்புகளைக் குறித்தும் சிந்திக்கும்போது, ஒரு ஞானமான, நீதியான, அன்பான மற்றும் வல்லமையான சிருஷ்டிகரும், பரிபாலிப்பவரும், பாதுகாவலரும் இருப்பதை அது அவனுக்கு வெளிப்படுத்தும். மேலும் போற்றி வணங்குதல் *(veneration)*, கடமையுணர்வு *(conscien - tiousness)*, அறச்செயல் விருப்பம் *(benevolence)* போன்ற அவனுடைய ஒழுக்க மற்றும் மதரீதியான பண்புகளைக் கொண்டு அவன் அவைகளை ஆராயும்போது, இந்த தேவனுக்கு ஈடற்ற உச்சநிலையான அன்பையும், கீழ்ப்படிதலையும் செலுத்தவும், சக மனிதருக்கு ஓரளவான அன்பை செலுத்தவும் தான் கடமைப்பட்டிருப்பதை உணருவான். இவ்வாறாக இயற்கையானது, அவனுக்குச் சில மதரீதியான கோட்பாடுகளையும், ஒழுக்கரீதியான கோட்பாடுகளையும் வெளிப்படுத்தும். மேலும் அவன் அவைகளுக்குக் கீழ்ப்படிய கடன்பட்டிருக்கிறான் என்பதையும் அவனுக்கு வெளிப்படுத்தும். இந்த கோட்பாடுகளில் தேவனுடைய தன்மை, அவருடைய இயல்புகள், அவருடைய பரிபாலனம் ஆகியவற்றைப் பற்றிய சில அடிப்படை போதனைகள் அடங்கியிருக்கின்றன. இந்த ஒழுக்கரீதியான கொள்கைகளில் தேவனிடமும், சக மனிதர்களிடமும் அவனுக்கு இருக்கிற கடமை பற்றிய சில அடிப்படை போதனைகள் அடங்கியுள்ளன.

*9.* அதற்குப் பிறகு, அவன் தன்னுடைய சரீர, மன, ஒழுக்க மற்றும் மதரீதியான நிலையைக் குறித்து சிந்திக்கும்போது, இந்த நான்கு அம்சங்களிலும் அவனில் குறைபாடுகளும், தவறுகளும், பலவீனங்களும் இருப்பதை அவன் உணருவான். தேவனிடமும், சக மனிதனிடமும், தன்னிடமும் தனக்கு இருக்கிற கடமையைப் பூரணமாக நிறைவேற்றுவதற்கு இந்த பலவீனங்கள் தடையாக இருப்பதையும் அவன் உணருவான். இந்த பலவீனங்களினால் அவன் இந்த கடமைகளுக்கு எதிர்மாறான காரியங்களைச் செய்யக்கூடியவனாக இருக்கிறான் என்றும், பல நேரங்களில் இந்த எதிர்மாறான காரியங்களையே செய்கிறான் என்றும் அவன் உணருவான். இவ்வாறாக இயற்கையானது, அவனுக்கு அவனுடைய பாவமான தன்மையை வெளிப்படுத்தும்.

*10.* அவன் இந்த காரியங்கள் எல்லாவற்றையும் குறித்துச் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது, தேவனிடமும், சக மனிதனிடமும், தன்னிடமும் தான் செயல்படுகிற விதத்தை மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும், எவர்களுக்கு எதிராக அவன் பாவம் செய்திருந்தானோ அவர்களிடம் சென்று காரியங்களைச் சரிசெய்து கொள்ள வேண்டும் என்றும் இயற்கை அவனுக்குப் போதிக்கும். இருந்தாலும் இந்த காரியங்களைப் பற்றிய முழுமையான கருத்தை இயற்கை அவனுக்குக் கொடுக்காது. மேலும் அவனுக்காகத் தேவனை திருப்திப்படுத்தும் உண்மையான ஒப்புரவாகுதல் எவ்வாறு செய்யப்படக் கூடும் என்பது சம்பந்தமாக இயற்கை அவனுக்கு எவ்விதத்திலும் போதிப்பதில்லை. அவனுடைய இருத்தல் மற்றும் அவனுடைய எதிர்காலம் சம்பந்தமாக அவனுக்கு இருக்கும் பல பிரச்சனைகளுக்கு இயற்கை தீர்வு கொடுக்காது.

*11.* இதுவரை விவரிக்கப்பட்ட இயற்கையான வெளிப்பாடு என்ற ஓர் காரியம் இருக்கிறது என்று வேதாகமம் பல இடங்களில் சாட்சி கொடுக்கிறது. எடுத்துக்காட்டாக *சங். 19:1-6* வரையுள்ள வசனங்களைக் கவனிப்போம். வானங்கள் மற்றும் பூமியிலுள்ள ஒழுங்கு, அழகு, இசைவிணக்கம், பயன்பாடு, பகலும் இரவும் அடுத்தடுத்ததாக வருவது, பூமிக்குரிய நிலைமைகளின் சிறிய நுணுக்கங்கள், சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் செல்லும் பாதை ஆகியவைகள், தேவனுடைய ஞானம், நீதி, அன்பு மற்றும் வல்லமையின் வேலைகளில் அவருடைய மகிமையை வெளிப்படுத்துகின்றன என்று இவ்வசனங்கள் நமக்குக் காண்பிக்கின்றன.

*12. 104*-ம் சங்கீதம், இயற்கையையும், அதின் சிருஷ்டிப்பையும், அது பாதுகாக்கப்படுவதையும் குறித்து இந்த கருத்துகளை இன்னும் விரிவாகக் கொடுக்கிறது. இயற்கையானது, தேவனுடைய இருத்தல், அவருடைய இயல்புகள், அவருடைய குணாம்ச பண்புகள் ஆகியவற்றைப் பற்றிய வெளிப்பாடுகளை மனிதனுக்குக் கொடுக்கிறது என்றும், தேவனிடம் மனிதனுக்கு இருக்கிற கடமையைப் பற்றிய சிந்தனைகளை அவனுடைய மனதில் தூண்டுகிறது என்றும் நிரூபிக்கிற மற்ற பல பழைய ஏற்பாட்டு வசனங்களும் இருக்கின்றன. விசேஷமாக யோபு புத்தகத்தில் நாம் இந்த வசனங்களைக் காண்கிறோம்.

*13.* தேவனுடைய இருத்தல், அவருடைய நற்குணம், மனுகுலத்தின் மேல் அவர் காண்பிக்கிற பரிபாலன அக்கறை ஆகியவைகள் இயற்கையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன என்ற கருத்தை நாம் புதிய ஏற்பாட்டிலும் காண்கிறோம். வானத்திலிருந்து மழைகளையும், செழிப்புள்ள காலங்களையும் தந்து, மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறவராகத் தேவன் இயற்கையில் தம்மைப் பற்றிய சாட்சியை வைத்திருக்கிறார் என்று அப்.*14:17*-ம் வசனத்தில் வாசிக்கிறோம். மனிதர் தேவனோடு நெருங்கிய ஐக்கியத்திற்குள் வர அவர்களை வழிநடத்துவதற்காகவே இயற்கையில் இவ்விதமான வெளிப்பாடு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அப். *17:24 -28* வரையுள்ள வசனங்களில் தேவன் அப்போஸ்தலனாகிய பவுல் மூலம் சாட்சி கூறுகிறார். தேவன் இயற்கையின் மூலம் தம்மை மனிதனுக்கு வெளிப்படுத்துகிறார் என்பதைப் பற்றிய மிக நேர்த்தியான சாட்சியை ரோம. *1:19,20*-ம் வசனங்களில் தேவன் அப்போஸ்தலனாகிய பவுல் மூலம் கொடுக்கிறார். இங்கே, மற்ற காரியங்களுடன், தேவனுடைய நித்திய வல்லமையையும், தெய்வீக தன்மையையும் இயற்கை மனிதனுக்கு வெளிப்படுத்

துகிறது என்று அவர் காண்பிக்கிறார். மனிதனுடைய மன, ஒழுக்க மற்றும் மதரீதியான பண்புகளின் நிலையின் மூலம், தேவனுடைய பிரமாணத்தின் எஞ்சியுள்ள சிறு கூறுகள் மனிதனுடைய இருதயத்திலும், மனதிலும் இருக்கின்றன என்றும், அவனுடைய மனச்சாட்சி அதற்குச் சாட்சியிடுகிறது என்றும், அவனுடைய அறிவாற்றல் (“சிந்தனைகள்”) குற்றமுண்டு மற்றும் குற்றமில்லையென்றும் அவனுக்கு உணர்த்துகிறது என்றும் இயற்கை அவனுக்குக் காண்பிக்கிறது என்று ரோம. 2:14,15-ம் வசனங்களில் தேவன் அப்போஸ்தலர் மூலம் காண்பிக்கிறார். இவ்வாறாகத் தேவ ஆவியின் அகத்தூண்டுதலினால் எழுதப்பட்ட வேதாகமமானது, மதரீதியான செயல் எல்லையிலுள்ள நபர்கள், அடிப்படை கொள்கைகள் மற்றும் காரியங்களைப் பற்றி இயற்கையும் மனிதனுக்கு வெளிப்படுத்துகிறது என்று சாட்சி கூறுகிறது.

*14.* இவ்வாறாக இயற்கையின் சத்தத்தின் மூலம் நம்முடைய பரம பிதா மிக அற்புதமாக நம்மிடம் பேசுகிறார் என்று நாம் காண்கிறோம். நம்முடைய நன்மைக்காகப் “பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது.” “அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை.” அதாவது அவைகளின் சத்தம் சொல்லர்த்தமாகக் கேட்கப்படுவதில்லை. அவைகளின் சாட்சியை நாம் சொல்லர்த்தமாகக் கேட்பதில்லை. அவைகள் “மௌனமான சத்தங்களாக” இருக்கின்றன. ஒவ்வொன்றும் நம்முடைய மா உன்னத சிருஷ்டிகரின் இருத்தலுக்குச் சாட்சி கூறுகின்றன. தேவனுடைய சிருஷ்டிப்பின் கைவேலைப்பாட்டின் அற்புதங்களைக் குறித்து ஆழமாகச் சிந்திப்பதற்கும், அவரைத் தொழுதுகொள்வதற்கும் விடுமுறை நாட்கள் என்னே உகந்த சந்தர்ப்பங்களாக இருக்கின்றன!

## இயற்கை முழுவதும் பேசுகிறது

*பூமி, காற்று, கடல்கள் மற்றும் வானங்கள் மூலமாகத்,*
*தேவன் இருக்கிறார் என்று*
*இயற்கை முழுவதும் நமக்குச் சொல்கிறது:*
*இதோ! பகலின் முதல் கதிர்கள் உதிக்கையில்,*
*மேகங்கள் வழியாக*
*அவருடைய மகிமை வெளிப்படுகிறது.*

*அமைதியாகப் பிரகாசிக்கிற சூரியோதயம்,*
*உலகமெங்கும் வெளிப்படுகையில்,*
*அதன் வல்லமைமிக்க சிருஷ்டிகரின்*
*மகிமையான நாமத்தை,*
*ஒளியின் எழுத்துக்களால்*
*அடிவானத்தில் பதிவு செய்கிறது.*

*உலகமெங்கும் சுற்றித் திரிந்து,*
*சிருஷ்டிப்பின் அற்புதங்களைக் காண்கிற*
*அறிவார்வமுடையவர்களே,*
*இவைகள் எல்லாம் தேவன் இருப்பதை நிரூபிக்கின்றன*
*என்று அறிக்கைபண்ணி,*
*அவருக்கு முன்பாக குனிந்து பணிந்து*
*தொழுதுகொள்ளுங்கள்.*

## எழுத்து வடிவத்திலுள்ள தேவ வார்த்தை

*15.* தெய்வீக அகத்தூண்டுதலினால் எழுதப்பட்ட சத்திய வார்த்தையாகிய தேவ வார்த்தையானது, இயற்கையின் அற்புதமான சத்தத்தைக் காட்டிலும் மிக மேன்மையானதாக இருக்கிறது. திறந்த வெளிகளில் தியானித்துக் கொண்டிருந்த சங்கீதக்காரனாகிய தாவீது, தேவனுடைய வெளிப்பாடாக இருக்கிற இயற்கையின் கிரியைகளைப் போற்றுவது மட்டுமல்ல *(சங்.19:1-6)*, எழுத்து வடிவத்திலுள்ள தேவ வார்த்தையைக் குறித்தும் மிக உயர்வாகப் பேசுகிறார் *(சங்.19:7-11)*. அவர் தேவ வார்த்தையை குறைவற்றதாகவும், சத்தியமாகவும், செம்மையானதாகவும், தூய்மையானதாகவும், உண்மையானதாகவும், அனைத்தும் நீதியானதாகவும் வர்ணிக்கிறார். “கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது.” இந்த உயிர்ப்பிக்கப்படுதல் (முழுமையான மனமாற்றம்) சில மாதங்களில் நடக்கிற ஒன்றல்ல. அது வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் ஒரு வேலையாகும். ஆகையால் தேவ வார்த்தையை படித்து, அதை தியானித்து, நம்முடைய அன்றாட நடத்தைக்கு அதை பிரயோகிப்பது எவ்வளவு முக்கியமானதாகும்!

*16.* “கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய கற்பனை தூய்மையும், கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் [போற்றித்துதிக்கும் பயபக்தி] சுத்தமும், என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும், அவைகள் அனைத்தும் நீதியுமாயிருக்கிறது. அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது.” *(சங்.19:8-10)*.

*17.* பொன்னானது, அதின் பொருள் ரீதியான மதிப்புக்காகவும், அதைக் கொண்டு மற்ற பொருட்களைப் பெற்றுக்கொள்ளக்கூடும் என்பதற்காகவும் உயர்வாக மதிக்கப்படுகிறது. தேனும் கூட அதின் இனிப்புச் சுவைக்காகவும், போஷாக்களிக்கும் மற்றும் குணமாக்கும் பண்புகளுக்காகவும், அதினால் வரும் மற்ற இம்மைக்குரிய நன்மைகளுக்காகவும் உயர்வாக மதிக்கப்படுகிறது. ஆனால் தெய்வீக அகத்தூண்டுதலினால் எழுதப்பட்ட வேத வசனங்களோ, ஒருவனுடைய குணாம்சத்தைத் தேவ சாயலுக்கு ஏற்ப மறுரூபமாக்குவதற்காக மதித்துணரப்படுகிறது. அவ்வித ஒரு குணாம்சத்தில் தேவனுடைய பரிசுத்த ஆவியின் அழகான குணநலன்கள் அனைத்துமே இருக்கும். இந்த அழகான குணநலன்கள் தேவ வார்த்தையின் தாக்கத்தினால் இயல்பாகவே அபிவிருத்தி செய்யப்படுகின்றன. மேலும் தேவ வார்த்தையின் தாக்கத்தின் விளைவாகப் பிதாவுடனும், குமாரரிடமும் நாம் பெற்றுக்கொள்கிற நெருங்கிய ஐக்கியத்தினால் குணாம்சத்தின் இன்றியமையாத பகுதிகளாக அபிவிருத்தி செய்யப்படுகின்றன. மேலும் தேவனுடைய வார்த்தைகளினால் அவருடைய அடியான் எச்சரிக்கப்படுகிறேன்; அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு (வச.11).

*18.* தேவ வார்த்தையானது ஒரு கிறிஸ்தவனுக்கு ஜீவனாகவே இருக்கிறது. யோவா.6:63-ம் வசனத்தில் நம்முடைய கர்த்தர் சொன்ன வார்த்தைகள் எவ்வளவு அர்த்தம் நிறைந்தவைகளாக இருக்கின்றன: “ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது!” உண்மையான ஒரு கிறிஸ்தவன்

தன்னுடைய விடுமுறை நாட்களில் எங்கே சென்றாலும், தன் வேதாகமத்தைத் தன்னுடன் கொண்டு செல்வான். வேதாகமத்தைப் புரிந்துகொள்ள அவனுக்கு உதவும் சில காரியங்களையும் தன்னுடன் கொண்டு செல்வான். ஏனென்றால் தகுந்த மனத்தாழ்மையுடன் அவன், "ஒரு வன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும் *(How can I understand - நான் அதை எவ்வாறு புரிந்துகொள்வேன்?)"* என்று சொல்வான் *(அப். 8:31). "தேவனுடைய சபையை மேய்ப்பதற்கு... கண்காணிகளாகிய"* போதகர்களை அவர் தாமே ஞானமாக ஏற்படுத்தியிருக்கிறார் *(அப். 20: 28; 1 கொரி. 12: 28; எபே. 4: 11-15).* ஆகையால் ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய விடுமுறை நாட்களில், வேதாகமத்தை மட்டுமல்ல, அதைச் சரியாகப் புரிந்துகொள்வதற்கு அவனுக்கு உண்மையாக உதவும் காரியங்களைத் தன்னுடன் கொண்டுசெல்வான்.

*19.* ஆனால், தனக்கு இடையூறாக இல்லாமல், உதவியாக இருக்கும் எழுத்துக்களை மட்டுமே நாடி, உபயோகிக்கும்படிக்கு அவன் கவனமுள்ளவனாக இருக்க வேண்டும். சில புத்தகங்களும், சிறு புத்தகங்களும், கைப்பிரதிகளும், பத்திரிகைகளும் வேதாகமத்தை விளக்க முற்படும்போது, அதிக குழப்பத்தை மட்டுமே உண்டாக்கும். கிறிஸ்தவ மண்டலத்தின் முரண்பாடுகளையும், பொய்யின் பிதாவாகிய சாத்தானுடைய தப்பறைகளையும் போதிப்பதினால், அவைகள் இன்னும் அதிக குழப்பத்தை உண்டாக்கும். சாத்தான் உருவாக்கின மிக தந்திரமான சில பொய்கள் இவ்வாறாக இருக்கின்றன: "நீங்கள் சாகவே சாவதில்லை" என்று அவன் சொன்ன முதல் பொய் *(ஆதி.3:4; யோவா. 8:44); "பாவத்தின் சம்பளம் மரணமாக" (ரோம. 5: 12, 15, 17; 6: 16, 21, 23)* இல்லாமல், வேதனையில் நித்தியத்திற்கும் ஜீவிப்பதாகும் என்று அவன் சொன்ன பொய்; ஒருவன் உயிரோடு இருக்கும்போது இருந்ததை விட, மரித்த பிறகு அதிக ஜீவ சக்தியுடையவனாக இருப்பான் என்றும், உயிர்த்தெழுதலின் நாளுக்காகக் காத்திராமல், உடனே பரலோகத்திற்கோ அல்லது "நரகம்" என்று அவன் தவறாக அழைக்கும் வெப்பம் மிக்க சூழ்நிலைகளில் நித்திய வேதனைக்கோ செல்வான் என்றும் அவன் சொன்ன பொய் *(யோனா 2: 2 ; அப். 2: 31, 34; பிர. 9: 5, 10; சங். 6: 5; 115: 17; 146: 4; யோபு 14: 21; 1 கொரி. 15: 13-23);* மனுஷ ஆத்துமா *(எசே. 18: 4, 20; சங். 145: 20; மத். 10: 28; அப் 3: 23; 1 தீமோ. 6: 16)* என்பது, மனிதனுக்குள் இருக்கும் ஒரு காரியம் என்றும், அது இயல்பாகவே சாவாமையுடையதாக இருப்பதால், அது மரிக்கவோ, அழிக்கப்படவோ முடியாது என்று அவன் சொன்ன பொய்; மனிதனே ஒரு ஆத்துமாவாக இருக்கிறான் *(ஆதி. 2: 7; லூக். 12: 19; 1 பேது. 3: 20)* என்பதற்குப் பதிலாக, மனிதனுக்குள் ஒரு ஆத்துமா இருக்கிறது என்று அவன் சொன்ன பொய்.

*20.* தப்பறையை *(கட்டுக்கதைகள், 2 தீமோ.4:4)* அல்லாமல், சத்தியத்தை நேசிப்பவர்கள், தேவ வார்த்தைக்கு எதிராகப் போதிக்கும் எழுத்துக்களை படிப்பதையும், விநியோகிப்பதையும் தவிர்க்க மிகுந்த கவனமுள்ளவர்களாக இருப்பார்கள். தேவ வார்த்தையையும், சபைக்காகவும், உலகத்திற்காகவும் *(1 யோவா. 2:2)* தேவன் ஏற்படுத்தியிருக்கிற ரட்சிப்பின் மேன்மையான திட்டத்தையும் புரிந்துகொள்ள உண்மையாக விரும்புகிறவர்களுக்கு நாங்கள் "யுகங்களைப் பற்றிய தேவ ஏற்பாடு" *(P Vol. 1, The Divine Plan of the Ages)* மற்றும் "தேவன்" *(E Vol 1, God)* என்ற புத்தகங்களை விசேஷமாகப் பரிந்துரைக்கிறோம். தேவ வார்த்தையைப் பற்றிய சிறிய ஆய்வுகளுக்காக எங்களுடைய சிறு புத்தகங்களையும், கைப்பிரதிகளையும் பரிந்துரைக்கிறோம். ஒரு கிறிஸ்தவன் ஓய்வு நாட்களில் மற்ற இடங்களுக்குச் செல்லும்போது, தனக்கும், மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதற்கும் உபயோகமாக இருக்கும் தேவ வார்த்தையின் சத்திய புத்தகங்களையும், மற்ற எழுத்துக்களையும் தன்னுடன் கொண்டுபோக வேண்டும்.

### கிறிஸ்தவனின் சரியான பிரதிகிரியை

*21.* இயற்கையின் சத்தத்தின் மூலமாகவும், எழுத்து வடிவத்திலுள்ள அவருடைய வார்த்தையின் சத்தத்தின் மூலமாகவும் தேவன் நம்மிடம் பேசுவதை நாம் கேட்கும்போது, நம்முடைய சரியான பிரதிகிரியை என்னவாக இருக்க வேண்டும்? சங்கீதக்காரன் இதை நமக்கு *சங்.19-ன் மூன்றாம் பகுதியில் காண்பிக்கிறார் (சங்.19:12-14) : (1)*நம்முடைய விழுந்துபோன, ஆதரவற்ற நிலையை நாம் உணர வேண்டும், *(2)* நம்முடைய மறைவான குற்றங்களிலிருந்தும், துணிகரமான பாவங்களிலிருந்தும் விடுவிக்கப்படுவதற்காக ஊக்கமாக ஜெபிக்க வேண்டும், *3)* நம்முடைய வார்த்தைகளும், இருதயத்தின் தியானமும் *(நாம் விரும்புகிற சிந்தனைகள்)*, தேவனுடைய சமுகத்தில் பிரீதியாயிருக்க வேண்டும் என்று உண்மையாக விரும்ப வேண்டும்.

*22.* இயற்கையின் மௌனமான வார்த்தைகள் தேவ னுடைய கைவேலைப்பாட்டை நமக்குக் காண்பிக்கின்றன. தெய்வீக அகத்தூண்டுதலினால் எழுதப்பட்ட வார்த்தைகள் தேவனுடைய சிந்தனைகளையும், மனுஷருக்கு அவர் கொடுக்கிற செய்தியையும் வெளிப்படுத்துகின்றன. நம்முடைய வார்த்தைகள் நம்முடைய சிந்தனையின் வெளிப்பாடுகளாக இருக்கின்றன. "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்" *(மத்.12:34).* மேலும் நாம் காண்கிற காரியங்களும், நாம் படிக்கிற காரியங்களும் நம்முடைய சிந்தனையின் மேல் மிகுந்த தாக்கத்தை உண்டு பண்ணும்.

*23.* விடுமுறை நாட்களில் மற்ற இடங்களுக்கு செல்கிற பலர், இயற்கையில் அமைதியாக வெளிப்படுகிற தேவனுடைய சத்தத்தை கேட்க இயலாதவர்களாக இருக்கிறார்கள். மேலும் பலர் எழுதப்பட்ட தேவ வார்த்தையை படிப்பதோ அல்லது தியானிப்பதோ இல்லை. ஆகையால் நாம் நம்முடைய மா உன்னத சிருஷ்டிகரின் நன்மையைக் குறித்து சாட்சி கூற நம்முடைய சத்தத்தை உபயோகிப்போமாக. "என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரியமாயிருப்பதாக" என்பதே நம் ஒவ்வொருவரின் ஜெபமாக இருப்பதாக.

★★★★★★★★★★★★★★★★★★★★★

# பரிமள தைலத்திலுள்ள செத்த ஈக்கள்

***BS# 289, April 1960, pp. 30,31***

*"செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமளதைலத்தை நாறிக் கெட்டுப்போகப்பண்ணும்; ஞானத்திலும் கனத்திலும் பேர்பெற்றவனைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய்யும்" (பிர. 10:1).*

### இவ்வசனத்தின் விளக்கமென்ன?

1. "செத்த ஈக்கள் (எபிரெய வார்த்தையின்படி – *flies of death* - சாவை உண்டுபண்ணும் ஈக்கள்) என்பது நோயை பரப்புவதால் மரணத்தை உண்டுபண்ணும் ஈக் களைக் குறிக்கக் கூடும் (சங். 7:13-ம் வசனத்துடன் ஒப் பிட்டுப் பார்க்கவும் –மரணாயுதங்கள் – *instruments of death* – மரணத்தை உண்டுபண்ணும் ஆயுதங்கள்). ஆனால் இவ் வசனத்தில் செத்த ஈக்கள் குறிப்பிடப்படுகின்றன என்று நாங்கள் புரிந்து கொள்கிறோம். அதாவது நல்ல தைலத் திற்குள் நுழைந்த ஈக்கள் செத்து அதற்குப் பிறகு அந்த தைலத்திற்குள் அழிந்து, அந்த தைலத்தை நுரைக்கச் செய் வது இங்கே அர்த்தப்படுத்தப்படுகிறது. அந்த தைலத்தின் உள்ளமைப்பு மாற்றப்பட்டு அது நுரை தள்ளி, அதில் சிறு குமிழ்கள் உண்டாகும். படிப்படியாக அந்த தைலம் நாறி முற்றிலும் கெட்டுப்போகும். இது 1கொரி. 5:6-ம் வசனத் தில் சொல்லப்பட்ட கருத்துக்கு சற்று ஒத்ததாயிருக் கிறது."கொஞ்சம் புளித்த மா பிசைந்த மா முழுவதையும் புளிப்பாக்கும்" (மத். 13:33-ம் வசனத்துடன் ஒப்பிட்டு பார்க்கவும்).

2. பிர.9-ம் அதிகாரத்தின் கடைசி வசனத்தில் "பாவியான ஒருவன் மிகுந்த நன்மையைக் கெடுப்பான்" என்று வாசிக்கிறோம். இது பிர.10:1-ம் வசனத்தின் முன் னுரையாக இருக்கிறது. அதின் முடிவுரையாக பிர. 10:1-ம் வசனத்தில், தைலக்காரனுடைய நல்ல பரிமள தைலத் திலுள்ள செத்த ஈக்கள் (சிறிய எண்ணிக்கையிலிருந் தாலும்) படிப்படியாக அந்த தைலத்தை நாறிக் கெட்டுப் போகப் பண்ணுவதைபோல், "ஞானத்திலும் கனத்திலும் பேர் பெற்றவனைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய் யும்". ஆகையால் இங்கே ஒப்பிடப்படுகிற கருத்து என்ன வென்றால், முதலில் மிகவும் அற்பமாகத் தோன்றுகிற ஒரு காரியத்தின் சீர்கேடான தாக்கம் என்பதாகும். அதா வது அது முதலில் மிகவும் அற்பமானதாக இருந்தாலும், படிப்படியாகப் பெரிதும் பரவும்.

3. பொதுவாக நல்ல குணாம்சமுடைய அநேகர் ஆரம்பத்தில் எடுத்த ஒரு தவறான படியினாலும், ஒரு சிறிய மீறுதலினாலும் இறுதியாகக் குணாம்சத்தில் சீர் கேடடைந்திருக்கிறார்கள். அது ஆரம்பத்தில் சத்தியம் மற்றும் நீதியின் பாதையிலிருந்து சற்று விலகுவதாக மட்டுமே இருந்திருக்கக் கூடும். ஆனால் அந்த தவறான போக்கில் தொடர்ந்து ஈடுபடும்போது, தேவன் அவனில் அபிவிருத்தி செய்திருந்த பரிசுத்த ஆவியின் குணநலன் களைப் (கலா. 5:22, 23; 2 பேது. 1:5-10) படிப்படியாகச் சீர்கேடடையச் செய்யும். அவைகள் உருவகமாக நாறி, புளிப்படைந்து குணகேடுகளாக மாறும். இது அவனை இறுதியாக அழிவை அறுக்கச் செய்யும் (கலா.6:7,8). இது ஒரு தண்டவாள பாதையிலிருந்து மற்றொரு பாதைக்கு மாறுகிற ரயில் வண்டிக்கு ஒப்பாக இருக்கிறது. ஆரம் பத்தில் அதின் திசை சிறிதளவில் மட்டுமே மாறும். ஆனால் இறுதியாக அதின் பிரயாணம் முதலாம் பாதை சேர வேண்டிய இடத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஒரு இடத்தில் முடிவடையும்.

4. அது போலவே தேவ வார்த்தையின் சத்தியத் தைப் (ஞானம்) பெரிதளவில் பெற்றிருக்கிறவனாக உயர் வாக மதிக்கப்படுகிற ஒருவன், ஒரு சிறிய தப்பறையை உள்வாங்கி ஏற்றுக்கொள்வானேயானால், அந்த தப்பறை யானது புளிப்பைப்போல் அவனுடைய சுத்தமான நம் பிக்கைகள் மற்றும் போதனைகளுக்குள் படிப்படியாகப் பரவி, அவைகளைச் சீர்கெடச் செய்யும். ஏனென்றால் அவனுடைய தப்பறைகளுக்கு ஆதரவாக வேத வசனங் களை இணக்கமாக்குவதற்கு அவன் அந்த வசனங்களை




மென்மேலும் திரித்துக் கூறி அவைகளுக்குத் தவறான விளக்கங்களைக் கொடுப்பான்.

5. சத்தியமென்னும் விலையேறப் பெற்ற பரிமள தைலத்திற்குள் தப்பறை என்னும் "செத்த ஈக்கள்" நுழைந்து, சத்தியத்தைப் பெரிதாகப் புளிப்படையச் செய்து, சீர்கேடடைய செய்து, பலவிதமான நாற்றங்களை உண்டு பண்ணின ஒரு குறிப்பிடத்தக்க உதாரணத்தைக் கவனிப்போம்: "அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" (ஆதி. 2:17) என்று தேவன் ஆதாமிடம் சொன்ன போது, பாவத்தின் தண்டனையைப் பற்றிய சுத்தமான சத்தியத்தை அவர் கொடுத்தார். இப்போது தப்பறையின் "செத்த ஈக்களைக்" கவனியுங்கள்: "நீங்கள் சாகவே சாவ தில்லை" (ஆதி. 3:4) என்று சொல்லி சாத்தான் தேவனை எதிர்த்தான். இவ்வாறாக அவன் பிரபஞ்சத்தில் சொல்லப் பட்ட முதல் பொய்யைச் சொன்னான் (யோவா. 8:44). சர்ப்பத்தின் மூலமாக அநேகமாக அதின் செயல்களின் மூலமாக (வார்த்தைகளை விட செயல்கள் சத்தமாகப் பேசும்) தாய் ஏவாளை வஞ்சிக்க சாத்தான் இந்த முதல் பொய்யைத் தந்திரமாகப் பயன்படுத்தினான் (1 தீமோ. 2:14; 2 கொரி. 11:3).

6. சுவிசேஷ யுக ஆரம்ப நூற்றாண்டுகளில், அநேகர் "பாவத்தின் சம்பளம் மரணம் [ஜீவன் முடிவுக்கு வருவது]; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த் தராகிய யெஷுஆ கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்" (ரோம. 6:23) என்ற தேவ வார்த்தையின் போத னையை விட்டு விட்டு, தேவ வார்த்தைக்குப் பதிலாகச் சாத்தானுடைய பொய்யை நம்பும்படி அவ்வாறே வஞ்சிக் கப்பட்டார்கள். சாத்தானுடைய பொய்யை ஆதரிப்பதற் காக அவர்கள் ஒரு தப்பறையிலிருந்து மற்றொரு தப் பறைக்குள் சென்று கொண்டே இருந்தார்கள். இந்த சீர்கேடு தொடர்ந்து பரவி, இறுதியாக இருண்ட யுகங் களின் மதப்பிரிவு கோட்பாடுகளினால், சத்தியமென்னும் தூய்மையான பரிமள தைலம் மிகவும் சீர்கேடடைந்து துர்நாற்றத்தை வெளியிட்டது (இப்போது வெளியிட்டுக் கொண்டே இருக்கிறது). எடுத்துக்காட்டாகப், பாவத்தின் தண்டனை அல்லது சம்பளமாக இருக்கிற மரணமானது, சொல்லர்த்தமான அக்கினியிலும் கந்தகத்திலும் நித்தியத் திற்கும் வாதிக்கப்பட்டு ஜீவிப்பதை அர்த்தப்படுத்துவ தாகச் சாத்தானுடைய பொய்யினால் சீர்கேடடைந்தது (வேதாகமத்தில் அக்கினியும் கந்தகமும் அழிவை அடை யாளப்படுத்த உபயோகிக்கப்படுகின்றன). மேலும் வேதனையில் இந்த நித்திய ஜீவனானது, மனுஷன் இயற் கையாகவே சாவாமையுடைய ஆத்துமாவுடன் சிருஷ்டிக் கப்பட்டதின் ஒரு விளைவாக இருப்பதாகக் கருதப் பட்டது (இதுவும் பல வேத வசனங்களுக்கு முரண்பாடாக இருக்கிறது - மனுஷ ஆத்துமா சாகக் கூடுமென்று இவ்

*வசனங்கள் காண்பிக்கின்றன – எசே. 18:4, 20; சங். 22:29; 30:3; 56:13; 78:50; 89:48; 119:175; யாக். 5:20).* தேவன் தாமே சிருஷ்டித்த இந்த ஆத்துமாவை அவரே அழிக்க முடியாத தால், அது ஏதேனுமொரு இடத்தில் நித்தியத்திற்கும் ஜிவிக்க வேண்டுமென்ற தப்பறையை உருவாக்கினார் கள். ஆனால் தேவன் ஆத்துமாவை அழிக்க வல்லவர் என்று வேத வசனங்கள் தெளிவாகக் கூறுகின்றன *(மத். 10:28).*

*7.* இந்த சீர்கேடு மென்மேலும் அதிகரித்துக் கொண்டிருக்கையில், ஆயிர வருடம் நியாயத்தீர்ப்பு நாளைப் பற்றிய சத்தியத்தையும் *(2 பேது. 3:7, 8; அப். 17:31),* உயிர்த்தெழுதலில் மரித்தோர் எழுப்பப்படுவதை பற்றிய சத்தியத்தையும் பலரின் மனதில் சீர்கெடச் செய் தது. மரித்தோர் பூமியின் தூளில், கல்லறைகளில் நித்திரை பண்ணுவதாக வேதாகமம் கூறுகிறது *(தானி.12:2; யோவா. 5:27-29; 11:11-14,44; 1 கொரி.15:12-23; ஏசா.26:19).* மனுஷ ருக்கு அளிக்கப்படும் வெகுமதிகளும் தண்டனைகளும், அவர்கள் உயிர்த்தெழுதலில் எழுப்பப்படுவதற்கு முன்பு கொடுக்கப்படுவதில்லை என்று அப்போஸ்தலர்களும் *(2 தீமோ. 4:8; 1 பேது. 1:13; 4:13; 5:4; 2 பேது. 2:9; 1 யோவா. 3:2),* கர்த்தராகிய யெஷுஆவும் சாட்சி கூறுகிறார்கள் *(லூக். 14:14; வெளி. 11:18; 22:12; யோவா. 3:13).* இருண்ட யுகங்களின் கோட்பாடுகளோ இந்த சாட்சியையும் எதிர்ப் பதால், மனுஷர் மரித்தவுடனே அவர்களுக்கு வெகுமதி களும் தண்டனைகளும் அளிக்கப்படுகின்றன என்று பலர் நம்பத் தொடங்கினார்கள். அதாவது நல்லவர்கள் மரித்த வுடனே பரலோகத்திற்குச் செல்கிறார்கள் என்றும், துன்மார்க்கர் மரித்தவுடனே நித்திய வேதனையின் அக்கினிக்குள் செல்கிறார்கள் என்றும் பலர் நம்பத் தொடங்கினார்கள். இவ்வாறாக வேதாகமத்தில் குறிப் பிடப்பட்ட நரகம் என்ற வார்த்தையின் உண்மையான அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல் (ஷியோல் அல்லது ஹேடிஸ் - மரித்த ஆத்துமாவின் உணர்வற்ற நிலை மற்றும் கெஹென்னா - நித்திய அழிவு, நிர்மூலமாக்கப்படுதல்), சில உவமைகளும் உருவகமான வேத வசனங்களும் சொல்லர்த்தமான அறிக்கைகளாக இருப்பதாகக் கருதி, அப்படியே எடுத்துக்கொள்ளும்படி தவறாக வழிநடத்தப் பட்டதால், தேவனுடைய பரிசுத்த நாமத்தைத் தூஷிக்கத் தொடங்கினார்கள். அவர்களே ஒருபோதும் செய்யாத குற்றத்தை தேவன் செய்கிறதாகக் கூறி, அவரை இரக்க மற்றவராகவும் கொடியவராகவும் சித்தரிக்கிறார்கள்!

*8.* இவ்வாறாகச் சத்தியமென்னும் விலையேறப் பெற்ற நறுமணம் வீசும் பரிமள தைலத்திற்குள், சாத்தான் புகுத்தின தப்பறை என்னும் "செத்த ஈக்கள்", அவை களுடைய சீர்கேடான தாக்கத்தைப் பரப்பின. இறுதியாக, மிகுந்த மகிழ்ச்சி அளிக்கும் நறுமணத்தை வீசுகிற அந்த தைலம் துர்நாற்றம் வீசும் ஒன்றாக மாற்றப்பட்டது. கிறிஸ்தவர்களாகிய நாம் விழிப்புள்ளவர்களாயிருந்து, நாம் தேவனுடைய விலையேறப் பெற்ற சத்தியத்துடனும் அதின் ஆவியுடனும் முற்றிலும் இணக்கமாக இருக்கும் படி நம்மைக் காத்துக் கொள்வோமாக. "செத்த ஈக்கள்" எல்லாவற்றிலிருந்தும் அதைப் பாதுகாப்போமாக. நாம் அவ்வாறு செய்யும்போது *(2கொரி.2:14-17* வரையுள்ள வசனங்களில் காண்பிக்கப்பட்டதைப் போல்) தேவன் கிறிஸ்துவுக்குள் எப்போதுமே நம்மை வெற்றி சிறக்கப் பண்ணுவார். மேலும் எல்லா இடங்களிலேயும் நம்மைக் கொண்டு அவரை அறிகிற வாசனையை வெளிப்படுத்து வார். ஏனென்றால் இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கிற வர்களுக்குள்ளேயும், கெட்டுப்போய் கொண்டிருக்கிறவர் களுக்குள்ளேயும் நாம் கிறிஸ்துவின் நற்கந்தமாக இருக் கிறோம். கெட்டுப் போகிறவர்களுக்குள்ளே *(அவர்களு டைய தவறான இருதய நிலையினால்)* நாம் *(நாம் போதித்து அப்பியாசிக்கிற தூய்மையான சத்தியத்தின் காரணமாக)* மரணத்திற்கேதுவான மரண வாசனையாக இருக்கிறோம் *(நாம் அவர்களுக்குத் துர்நாற்றமாக இருக் கிறோம்).* ஆனால் இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே *(சரியான இருதய நிலையுள்ளவர்கள்)* ஜீவனுக்கேதுவான *("சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர் களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது- 1கொரி 1:18)* ஜீவ வாசனையாக *(ஆறுதல் மற்றும் புத்துணர்ச்சி அளிக்கும் சுகந்த வாசனை)* இருக்கிறோம். இவைகளை நடப்பிப்பதற்கு எவன் தகுதியானவன் *(நிச்சயமாக நம் முடைய சொந்த பலத்தினால் நம்மில் ஒருவனும் தகுதி யுள்ளவனல்ல, மாறாகத் தேவ வார்த்தையின் தூய்மை யான சுவிசேஷ செய்தியினாலும், அது அளிக்கிற பலத் தினாலும் மட்டுமே தகுதி பெறுகிறோம்)?* அநேகரைப் போல் *(பெரும்பான்மையானோரைப் போல)* நாம் தேவ வார்த்தையைக் கலப்பாய் பேசாமல், துப்புரவாகவும் தேவ னால் அருளப்பட்ட பிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவ சந்நிதியில் பேசுகிறோம். ஆகையால் இந்த பரிமள *தைலத்தைச் செத்த ஈக்களிடமிருந்து பாதுகாப்போமாக!*

★★★★★★★★★★★★★★★★★★★★★

# யாவே தேவனுடைய பாதஸ்தானம் மகிமைப்படுத்தப்படுவது

## *P Vol. 4, Ch. XIV*

*"கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: வானம் எனக்குச் சிங்காசனம், பூமி எனக்குப் பாதபடி."*
*"என் பாதஸ்தானத்தை மகிமைப்படுத்துவேன்."*
*"அந்நாளிலே அவருடைய [யாவே தேவனுடைய] பாதங்கள் … ஒலிவமலையின்மேல் நிற்கும்."*
*ஏசா. 60:13; 66:1; சக. 14:4; மத். 5:35; அப். 7:49.*

*1.* **க**டந்த *6000* வருடங்களாகத் தேவனுடைய பாதஸ்தானம் மகிமையில்லாத ஒன்றாக இருந்து கொண் டிருக்கிறது: பாவம், வலி, அழுகை, மன ரீதியான மற்றும் சரீர ரீதியான பாடுகள், மரணம் ஆகியவைகள் அதைக் கல்லறைகள் நிறைந்த ஒரு பெரிய வீடாக ஆக்கிற்று. அதிலுள்ள கோடிக்கணக்கானவர்கள், தெய்வீக நீதியின் சாபம் நீக்கப்படும் காலமும், நம்முடைய கர்த்தராகிய யெஷுஆ கிறிஸ்துவின் முகத்திலுள்ள தெய்வீக தயவின் ஒளி நீதியின் சூரியனைப் போல் உதிக்கும் காலமும் வருவதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

### இந்த ஒளி பாவத்தின் இருளான நிழல்களை அகற்றி, ஆரோக்கியத்தின் கதிர்களைக்கொண்டு அந்தகாரத்தை பிரகாசிப்பிக்கும்

*2.* இதற்காகத் தேவன் மிகுதியான ஒரு ஏற் பாட்டைச் செய்திருக்கிறார். ஆதாமுக்காகவும், அவரு டைய பிள்ளைகளாக அவர் மூலமாக இழப்புக்

குள்ளானவர்களுக்காகவும் கொடுக்கப்பட்ட மீட்கும் பலி முழு உலகத்தையும் கிரயத்திற்குக் கொள்ளும். மேலும் மனுகுலத்தைச் சேர்ந்த ஒவ்வொருவனும், அனுகூலமான சூழ்நிலைகளின்கீழ், நித்திய ஜீவன் அடைவதற்கான பரீட்சையைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தை, அவனுக்கு நிச்சயிக்கும். அதற்கும் மேலாக ஆதாமின் வீடாகிய பரதீசையும் (ஆதாமின் மீறுதலினால் அதுவும் இழக்கப்பட்டது), அவருடைய சிருஷ்டிகரும் பிதாவுமாகிய தேவனுடைய பிரதிநிதியாக பூமியின் மேல் ராஜாவாக ஆளும் தகுதியையும் அது கிரயத்திற்குக் கொள்ளும்.

*3.* ஆகையால் "மந்தையின் துருக்கமே (கிறிஸ்து), சீயோன் குமாரத்தியின் அரணே, முந்தின ஆளுகை உன்னிடத்தில் வரும்" என்று நாம் வாசிக்கிறோம் *(மீகா. 4:8)*. "சொந்தமானவர்கள் மீட்கப்படுவதை" *(redemption of the purchased possession KJV )* குறித்து பவுல் அப்போஸ்தலரும் பேசுகிறார் (எபே. *1:14*). நம்முடைய கர்த்தர் சொன்ன ஒரு உவமையிலும் அவர் இதைக் குறிப்பிடுகிறார். அவர் பொக்கிஷமாகிய மனுகுலத்தை மட்டுமல்ல நிலமாகிய உலகத்தையும் (பூமியையும்) சாபத்திலிருந்து கிரயத்திற்குக் கொள்கிறார். ராஜ்ய வகுப்பின் அங்கத்தினர்களாக அவரோடு சேர்ந்து கொள்கிற அனைவரும் அந்த நிலத்தையும் பொக்கிஷத்தையும் கிரயத்திற்குக் கொள்வதில் பங்கு கொள்வார்கள் (மத். *13:44*).

*4.* தேவனுடைய பாதஸ்தானத்தை ஒழுங்குப்படுத்தி மகிமைப்படுத்துவதென்பது மில்லினியத்தின் முழு வேலையாக இருக்கும். பாவத்தினால் பரதீசை இழந்தபோது, அது பூமியின் ஒரு மூலையிலுள்ள ஒரு தோட்டமாக மட்டுமே இருந்தது. ஆனால் இப்போது ஆதாமின் சந்ததியானது, தெய்வீக நோக்கத்திற்கிணக்கமாகப் பலுகி பெருகி பூமியை நிரப்பிற்று (ஆதி. *1:28*). அவர்கள் எல்லோருக்காகவும் மீட்கும் கிரயம் கொடுக்கப்பட்டிருப்பதால், எல்லோருக்கும் இடமளிக்கக்கூடிய அளவிற்கு பெரிதான ஒரு பரதீசை ஏற்படுத்துவது தேவையாயிருக்கும். முழு பூமியும் கனிகளால் நிறைந்த, அழகான, பூரணமான ஏதேன் தோட்டமாக மாறும் என்பதை இது அர்த்தப்படுத்தும். வருங்காலத்தில் நிறைவேற்றப்படும் தெய்வீகத் திட்டத்தின் மாட்சிமையான நிறைவாக இவைகளெல்லாம் வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக்கின்றன (அப். *3:20, 21*; வெளி. *2:7*; *2* கொரி. *12:3*).

*5.* மில்லினிய யுகத்தின் முடிவில் மகிமைப்படுத்தப்படும் கர்த்தருடைய பாதஸ்தானத்தின் மிகச் சிறந்த பொக்கிஷம் மனுகுலமாக இருக்கும். மனுகுலத்தின் பூரணத்துவத்திலும், சுயாதீனத்திலும், ஒழுக்க ரீதியான மற்றும் அறிவு சார்ந்த குணநலன்களில் அவர்களுக்கிருக்கும் தேவ சாயலிலும் தேவனுடைய ரூபம் பிரதிபலிக்கப்படும். பூரண மனுஷன் அவனுடைய சிருஷ்டிகரையும், அவனுடைய சிருஷ்டிப்பு, மீட்பு மற்றும் இழந்ததைத் திரும்பக் கொடுத்தல் ஆகியவற்றிற்காக அவர் ஏற்படுத்திய அதிசயமான திட்டத்தையும் மிக மகிமையாகக் கனப்படுத்துவான். இந்த அற்புதமான திட்டத்தோடு முதல் நிலையில் யாவே தேவனுடைய வார்த்தையாகிய கர்த்தராகிய யெஷுஆவுக்கும், இரண்டாம் நிலையில் மணவாட்டிக்கும் எப்போதுமே நெருங்கிய பந்தமிருக்கும். மீட்கும் பலியினால் நிச்சயிக்கப்பட்ட ஆசீர்வாதங்களை அருளுவதில் மணவாட்டி வகுப்பார் ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகவும் உடன் சுதந்தரவாளிகளாகவும் இருப்பார்கள்.

*6.* கர்த்தருடைய பாதஸ்தானம் இவ்வாறு அழகுப்படுத்தப்பட்டு மகிமைப்படுத்தப்படுவதென்பது, பிதாவின் கனம் பொருந்திய செயலியக்கியாகிய நம்முடைய கர்த்தராகிய யெஷுஆ, தேவனுக்கு விரோதமான "சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரிக்கும் வரை" நிறைவடையாது. ஏனென்றால் மில்லினிய யுகத்தின் முடிவில் அவர் ராஜ்யத்தை ஒப்புக் கொடுப்பதற்கு முன்பு எல்லா சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப் போடும் வரைக்கும் ஆளுகை செய்ய வேண்டும் (*1*கொரி. *15:24-28*).



*7.* பாவம் மற்றும் மரணம் ஆட்சி செய்யும் இந்த காலமானது, தேவன் "தமது கோபத்தின் நாளிலே தமது பாதபீடத்தை நினையாமல் போன" காலமாக விவரிக்கப்படுகிறது (புலம். *2:1*). ஆனால் மில்லினிய யுகம் தொடங்கின பிறகு, ஜனங்கள் "நம்முடைய தேவனாகிய கர்த்தரை உயர்த்தி, அவர் பாதபடியிலே பணிய" தீர்க்கதரிசனத்தின் மூலம் அழைக்கப்படுகிறார்கள் (சங். *99:5*). தேவனுடைய மகிமைப்படுத்தப்பட்ட சபையாகிய புதிய எருசலேம் பூமியின் மேல் புதிய அரசாங்கமாக ஸ்தாபிக்கப்படுவதென்பது, யாவே தேவனுடைய பாதஸ்தானத்திற்குத் தெய்வீகத் தயவு திரும்புவதின் ஆரம்பத்தை அர்த்தப்படுத்தும் என்று சகரியா தீர்க்கதரிசியின் மூலம் தெளிவாக அறிவிக்கப்படுகிறது (சகரி. *14:4,5*).

## யாவே தேவனுடைய பாதங்கள் ஒலிவ மலையின் மேல் நிற்கும்

*8.* இந்த தீர்க்கதரிசனம் பொதுவாகத் தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. பலர் அதை நம்முடைய கர்த்தராகிய யெஷுஆவின் இரண்டாம் வருகையில் அவருடைய பாதங்களைக் குறித்து சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம் என்று தவறாகப் புரிந்து கொள்கிறார்கள். இவ்வாறு தவறாக அதைப் புரிந்து கொள்கிறவர்கள் அதற்கும் மேலாக சென்று, கல்வாரியின் ஆணிகளால் குத்தப்பட்ட அவருடைய மனுஷீகத்தின் பாதங்களைக் குறிக்கிறது என்று தவறாகக் கூறுகிறார்கள். நம்முடைய கர்த்தராகிய யெஷுஆ நம்முடைய மீட்கும் கிரயமாக அவருடைய மனுஷீக தன்மையை முழுமையாகவும் நித்தியத்திற்கும் பலி செய்தார் என்றும், பிதாவின் வல்லமையினால் ஒரு மகிமையான ஆவி ஜீவியாகவும் பிதாவின் தன்மையின்

தற்சொரூபமாகவும் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார் என்று அவர்கள் உணராதிருக்கிறார்கள்.

*9.* ஆனால் சகரி. *14:3-ம்* வசனத்தைப் பார்க்கும்போது, இங்கே தீர்க்கதரிசி யாவே தேவனுடைய பாதங்கள் திரும்ப வருவதை குறித்துச் சொல்கிறார் என்று நாம் காண்போம். ஏனென்றால் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்நிகழ்வாகிய உபத்திரவத்தைக் குறிப்பிடுகிற இவ்வசனம் இவ்வாறாயிருக்கிறது: "கர்த்தர் [யாவே] புறப்பட்டு, யுத்தநாளிலே போராடுவதுபோல் [பண்டைய காலத்தில் இஸ்ரயேலுக்காகச் செய்ததைப் போல்] அந்த ஜாதிகளோடே போராடுவார். அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின்மேல் நிற்கும்; அப்பொழுது மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவமலை தன் நடுமையத்திலே கிழக்கு மேற்காய் எதிராகப் பிளந்து போம்; அதினாலே, ஒரு பாதி வடபக்கத்திலும் ஒரு பாதி தென்பக்கத்திலும் சாயும்." *(சகரி. 14: 3, 4).*

*10.* இங்கே குறிப்பிடப்படுகிற பாதங்கள் யாவே தேவனுடைய பாதங்களாக இருக்கின்றன என்று புரிந்து கொண்டவுடனே, இவ்வசனத்தின் வார்த்தைகள் உருவகமானவைகள் என்று நாம் தெளிவாகப் புரிந்து கொள்வோம். இது பூமியின் மேல் தேவனுடைய ஆளுகை திரும்ப ஸ்தாபிக்கப்படுவதைக் குறிக்கிறது. இந்த ஆளுகை நீண்ட காலமாக "இவ்வுலகத்தின் தேவனாகிய" சாத்தானுக்கு விடப்பட்டிருக்கிறது. தேவனோ அந்தக் காலத்தில் மிக சிறிய அளவில் மட்டுமே பூமியில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டிருந்தார். முதலாவதாக அடையாளமான ஆசரிப்புக் கூடாரத்திலும், இரண்டாவதாக எருசலேமின் ஆலயத்திலும் கடைசியாகச் சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்துவின் சபையின் இம்மைக்குரிய கூடார நிலையிலும் தேவன் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டிருந்தார். யாவே தேவனுடைய பாதஸ்தானமாகிய இந்த பூமியின் மேல் அவர் சொல்லர்த்தமாகத் தம்முடைய பாதங்களை நிறுத்துகிறார் என்ற தவறான கருத்தை நிச்சயமாக எந்த ஒருவனும் ஏற்றுக் கொள்வதில்லை.

*11.* யாவே தேவனுடைய பாதங்கள் இவ்வாறு நிற்பதென்பது உருவகமான ஒன்றாக இருந்து பூமியின் மேல் தேவனுடைய தயவும் ஆளுகையும் திரும்ப வருவதை அர்த்தப்படுத்தும் போது, இதே தீர்க்கதரிசனத்திலுள்ள மற்ற காரியங்களும் உருவகமானவைகளாக இருக்க வேண்டுமென்று நாம் நிச்சயித்துக் கொள்ளலாம்: அதாவது ஒலிவ மலையும், அது விசேஷித்த விதத்தில் பிளந்து போவதும் அதின் பள்ளத்தாக்கும் ஜனங்கள் தப்பி ஓடிப் போவதும், எருசலேமிலிருந்து புறப்படுகிற ஜீவ தண்ணீர்களும் *(சகரி. 14:8-ம்* வசனத்தை எசே. *47:1-9* வரையுள்ள வசனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்) உருவகமான காரியங்களாக இருக்கின்றன. இவைகளெல்லாம் மாட்சிமையான ஆவிக்குரிய சத்தியங்களைக் குறிக்கின்றன.

*12.* ஒலிவ பழம் என்பது அர்த்தம் நிறைந்த ஒரு உருவகமாக இருக்கிறது. பண்டைய காலங்களில் அது வெளிச்சத்தை பெற்றுக் கொள்வதற்கு உபயோகிக்கப்பட்டது. பொதுவாக அதின் எண்ணெய் வெளிச்சத்திற்காக உபயோகிக்கப்பட்டது *(யாத். 27:20).* எபிரெய பாஷையில் ஒலிவ மரம் "ஷெமென்" *[shemen]* அல்லது எண்ணெய் மரம் என்று அழைக்கப்பட்டது. பண்டைய காலத்தில் விலையேறப்பெற்ற தைலங்களில் முக்கியமான பொருளாக ஒலிவ எண்ணெய் உபயோகிக்கப்பட்டது. ஆசாரியர்களையும் ராஜாக்களையும் அபிஷேகம் பண்ணுவதற்கு உபயோகிக்கப்படும் தைலத்திலும் ஒலிவ எண்ணெய் இருந்தது. இந்த அபிஷேக தைலம் நிஜ நிறைவேறுதலான "ராஜரீக ஆசாரியக் கூட்டத்தின்" மேலுள்ள பரிசுத்த ஆவியை அடையாளப்படுத்துகிறது *(யாத். 30:24).* நீண்ட காலமாக ஒலிவ கிளையானது சமாதானத்தின் ஒரு அடையாளமாக உபயோகிக்கப்பட்டுக் கொண்டு வருகிறது *(ஆதி.8:11; நெகே. 8:15).*

*13.* ஒலிவ பழமென்பது வெளிச்சம், சமாதானம் மற்றும் பரிசுத்த ஆவியின் மூலம் வரும் தெய்வீக ஆசீர்வாதத்தின் அடையாளமாகவும்; மலை என்பது ராஜ்யத்தின் அடையாளமாகவும் இருக்கும் போது, இங்கே ஒலிவ மலை என்பது வெளிச்சம், சமாதானம் மற்றும் தெய்வீக ஆசீர்வாதத்தின் ராஜ்யத்தை அர்த்தப்படுத்துகிறது என்று நாம் எளிதாகப் புரிந்து கொள்ளக்கூடும். யாவே தேவனுடைய பாதங்கள் அதின் மேல் நிற்பது அல்லது ஸ்தாபிக்கப்படுவது அல்லது நிலைநாட்டப்படுவதென்பது, அந்த பரிசுத்த ராஜ்யத்தினாலும், அதன் மூலமும் பூமியின் மேல் தெய்வீகத் தயவும் நியாயப்பிரமாணமும் திரும்ப ஸ்தாபிக்கப்படும் என்பதை அர்த்தப்படுத்தும்.

*14.* *யாவே தேவனுடைய ராஜ்யத்தில் இரு பகுதிகள் இருக்கும் என்று சக.*14:4-ம்* வசனம் காண்பிக்கிறது. "அந்நாளிலே [மில்லினிய யுகத்தில்] அவருடைய பாதங்கள் [யாவே தேவனுடைய தயையும், ஆளுகையும்] ... ஒலிவமலையின்மேல் [ஒளி, சமாதானம் மற்றும் தெய்வீக ஆசீர்வாதத்தின் ராஜ்யம்] நிற்கும்; அப்பொழுது மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவமலை தன் நடுமையத்திலே கிழக்கு மேற்காய் எதிராகப் பிளந்து போம்; அதினாலே, ஒரு பாதி வடபக்கத்திலும் [மனுஷீக சூழ்நிலைகளிலிருந்து ஆவிக்குரிய சூழ்நிலைகளுக்கு மாற்றப்படும்] ஒரு பாதி தென்பக்கத்திலும் [பாத்திரவான்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் பூமிக்குரிய ராஜ்யம்] சாயும் *(*PT 1967, p. 75).*

*15.* கடந்த காலத்தில் பூமியின் மேலுள்ள அந்த காரத்தில் உலகத்திற்குக் கிடைத்த வெளிச்சமெல்லாம் இந்த இரு ராஜ்யங்களிடமிருந்து வந்தது (அதாவது யாவே தேவனுடைய மகிமை அவைகளின் மேல் தங்கி, அவைகள் முழு மனுகுலத்தையும் ஆசீர்வதிக்கும் வழிகளாக ஆக்கப்படுவதற்கு முன்பும் கூட வெளிச்சம் இந்த ராஜ்யங்களின் மூலமே வந்தது). இந்த இரு ராஜ்யங்கள் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் பிரதிநிதிகளாகவும், ஆணையினால் கட்டப்பட்ட உடன்படிக்கையின் இரு பகுதிகளின் பிரதிநிதிகளாகவும் இருக்கின்றன அல்லவா? இவைகள் *சகரி.4:3,11,12* வசனங்களிலும் வெளி. *11:3,4* ம் வசனத்திலும் குறிப்பிடப்பட்ட கர்த்தருடைய இரு ஒலிவ மரங்களுடனும் இரு சாட்சிகளுடனும் தொடர்புடையவைகளாக இருக்கின்றன அல்லவா? மலையின் இந்த இரண்டு பகுதிகள், ஆணையினால் கட்டப்பட்ட உடன்படிக்கையின் இரு பகுதிகளின் விளைவுகளாக இருக்கின்றன அல்லவா? மேலும் அந்த உடன்படிக்கைக்குச் சாட்சி கொடுத்தவர்களே, ராஜ்யத்தின் பரத்துக்குரிய மற்றும் பூமிக்குரிய பகுதிகளாக இருக்கிறார்கள் அல்லவா?

*16.* இவ்வாறாக ஒலிவ மலையின் இரு பகுதிகள் தேவனுடைய ராஜ்யத்தின் இரு பகுதிகளை அடையாளப்படுத்துகின்றன என்பதை நாம் காண்கிறோம். இவ்விரண்டும் தெய்வீக ஒழுங்கு முறையின்படியும் ஏற்பாட்டின்படியும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த பிரிவானது ராஜ்யத்தின் இரு பகுதிகளுக்கிடையில் எதிர்ப்பு இருக்கும் என்று எவ்விதத்திலும் குறிக்காது. அதற்கு எதிர்மாறாக, அவ்விரண்டிற்கிடையிலுள்ள பள்ளத்தாக்கை "ஆசீர்வாதத்தின் பள்ளத்தாக்காக" ஆக்குவதே இந்த பிளவின் நோக்கமாக இருக்கிறது. தெய்வீக

தயவை பெற விரும்புகிற அனைவரும் இந்த பள்ளத் தாக்குக்கு தப்பியோடி, ராஜ்யத்தின் பரத்துக்குரிய மற்றும் பூமிக்குரிய பகுதிகள் இரண்டின் ஆசீர்வாதமான பாது காப்பின் கீழ் ஒத்தாசையைப் பெற்றுக் கொள்ளக்கூடும்.

*17.* யாவே தேவனுடைய பாதங்களுக்கருகே உள்ள இந்த மேன்மையான “ஆசீர்வாதங்களின் பள்ளத் தாக்கின்” ஒரு முன்காட்சி தாவீது தீர்க்கதரிசிக்குக் கொடுக்கப்பட்டது *(சங். 84).* அதில் அவர் முதலில் சுவி சேஷ யுக பரிசுத்தவான்களைக் குறித்தும் பின்பு மில்லினிய யுகத்தில் ஆசீர்வதிக்கப்படப் போகிறவர் களைக் குறித்தும் சொல்கிறார்.

*சேனைகளின் கர்த்தாவே, உமது வாசஸ்தலங்கள்*
*எவ்வளவு இன்பமானவைகள்!*
*என் ஆத்துமா கர்த்தருடைய*
*ஆலயப்பிராகாரங்களின்மேல்*
*வாஞ்சையும் தவனமுமாயிருக்கிறது;*
*என் இருதயமும் என் மாம்சமும்*
*ஜீவனுள்ள தேவனை நோக்கிக் கெம்பீர சத்தமிடுகிறது.*
*அடைக்கலான் குருவிக்கு வீடும்,*
*தகைவிலான் குருவிக்குத் தன் குஞ்சுகளை*
*வைக்கும் கூடும் கிடைத்ததே*
*என் ராஜாவும்*
*என் தேவனுமாகிய சேனைகளின் கர்த்தாவே,*
*உம்முடைய பீடங்களண்டையில் எனக்கும் அப்படியே*
*இடம் கிடைத்ததே.*
*உம்முடைய வீட்டில்*
*வாசமாயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள்;*
*அவர்கள் எப்பொழுதும் உம்மைத்*
*துதித்துக்கொண்டிருப்பார்கள். (சேலா.)*

*உம்மிலே பெலன்கொள்ளுகிற மனுஷனும்,*
*தங்கள் இருதயங்களில் செவ்வையான (நீதியான)*
*வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள்.*
*அழுகையின் பள்ளத்தாக்கை [Valley of Mourning]*
*உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக் கொள்ளுகிறார்கள்*
*[சந்தோஷத்தின் ஊற்றுகள் –];*
*மழையும் குளங்களை (Hb- berakah – ஆசீர்வாதங்கள்)*
*நிரப்பும் [மழை ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும் –*
*யோயே.2:28- அதனால் அழுகையின் பள்ளத்தாக்கு- Valley*
*of Mourning, ஆசீர்வாதங்களின் பள்ளத்தாக்காக மாறும் –*
*Valley of Blessings] .*
*அவர்கள் பலத்தின்மேல் பலம் அடைந்து,*
*சீயோனிலே தேவசந்நிதியில் வந்து [பூரணர்களாக]*
*காணப்படுவார்கள்.*

*18.* 85-ம் சங்கீதமானது, இரு பகுதிகளாக இருக் கிற ஒலிவ மலை (ராஜ்யம்) அடையாளப்படுத்துகிற மில்லினிய ராஜ்யத்தின்கீழ் தெய்வீக இரக்கமும் ஆசீர் வாதமும் திரும்பக் கொடுக்கப்படுவதைச் சித்தரிக்கிறது.

*19.* மலையின் ஒரு பாதி வட பக்கத்திலும் ஒரு பகுதி தென் பக்கத்திலும் சாய்வதும் முக்கியத்துவம் வாய்ந்ததாயிருக்கிறது. வடக்கு திசை என்பது அறுமீன் நட்சத்திரத்தின் திசையாயிருக்கிறது. அது தெய்வீகச் சாம் ராஜ்யத்தின் அரசாங்கத்தின் இருப்பிடமாகக் கருதப்படு கிறது. அது சுவிசேஷ யுக சபை மனுஷீக சூழ்நிலை களிலிருந்து ஆவிக்குரிய சூழ்நிலைகளுக்கு மாற்றப்பட்டு “திவ்விய சுபாவத்தில் பங்குள்ளவர்களாக” ஆக்கப்படு வதை அர்த்தப்படுத்துகிறது. மலையின் மற்றொரு பாதி தென்பக்கத்தில் சாய்வதென்பது தேவனுடைய ராஜ்யத் தின் பூமிக்குரிய பிரதிநிதிகளாக இருக்கத் தகுதி பெற்ற வர்களான பாத்திரவான்கள் பூரண மனுஷீக சூழ்நிலை களுக்கு முழுமையாகத் திரும்பக் கொண்டு வரப் படுவதை அர்த்தப்படுத்துகிறது.

*20.* இதன் மூலம் உருவாக்கப்பட்ட பள்ளத்தாக் கானது எவ்வித நிழல்களும் இல்லாமல் வெளிச்சம் நிறைந்த ஒன்றாக இருக்கும். ஏனென்றால் சூரியன் கிழக்கிலிருந்து மேற்கே அந்த பள்ளத்தாக்கு வழியாக பிரவேசிக்கும். இது பின்வரும் காரியத்தைச் சித்தரிக் கிறது: நீதியின் சூரியனின் மூலமும், அவர் அளிக்கும் தெய்வீகச் சத்தியம் மற்றும் ஆசீர்வாதம் என்னும் முழு வெளிச்சத்தினாலும், இந்தப் பள்ளத்தாக்குக்கு விருப்பத் துடன் தப்பி ஓடுகிற கீழ்ப்படிதலுள்ள மனுஷரிடமிருந்து பாவம், அறியாமை, மூடநம்பிக்கை மற்றும் மரண மென்னும் நிழல்கள் அகற்றப்பட்டு, அவர்களுக்கு ஆரோக்கியமும், குணமாகுதலும் அளிக்கப்படும். இவ் வாறாக இந்த பள்ளத்தாக்கு இரக்கத்தின் பள்ளத்தாக் காகவும், ஆசீர்வாதத்தின் பள்ளத்தாக்காகவும் இருக்கும். வெளிச்சம் மற்றும் சமாதானத்தின் ராஜ்யத்தின் (யாவே தேவனுடைய பாதங்கள் நிற்கும் இடம்) ஆவிக்குரிய மற்றும் மனுஷீக பகுதிகளுக்கிடையிலும் அவைகளின் பாதுகாப்பின் கீழுமுள்ள இரக்கத்தின் பள்ளத்தாக்கானது, நொறுங்குண்டு நறுங்குண்ட இருதயங்களோடு அதற்குள் பிரவேசிக்கும் அனைவருக்கும் நிச்சயமாக “ஆசீர்வாதங் களின் பள்ளத்தாக்காயிருக்கும்.”

*21.* “அப்பொழுது என் மலைகளின் பள்ளத் தாக்கு வழியாய் ஓடிப் போவீர்கள்” *(சக. 14:5)* என்று இஸ்ரயேலுக்கு மட்டுமே சொல்லப்பட்டிருந்தாலும், இஸ்ரயேல் என்ற பெயர் “தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட ஜனங்கள்” “தேவ ஜனங்கள்” “கர்த்தருடைய ஜனங்கள்” *(2 நாளா. 7:14)* என்பதை அர்த்தப்படுத்துவதை நாம் நினைவு கூர வேண்டும். நாம் ஏற்கனவே பார்த்ததைப் போல், ராஜ்யத்தின் முதலாம் அல்லது ஆவிக்குரிய ஆசீர்வாதம் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு வரும். இரண்டாம் அல்லது பூமிக்குரிய ஆசீர்வாதம் மாம்ச இஸ்ரயேலர் களுடன் தொடங்கும். ஆனால் அது அங்கேயே நின்றுவிடாது. ஏனென்றால் விருப்பமுள்ள அனைவரும் இஸ்ரயேலர்களாக ஆகக்கூடும். ஆபிரகாமுக்கொத்த விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் அப்பியாசிப்பதின் மூலம் முழு மனுகுலமும் உண்மையான இஸ்ரயேலர் களாகத், “தேவனுடைய ஜனங்களாக” ஆகக்கூடும். ஆகையால் ஏசாயா தீர்க்கதரிசி அறிவிக்கிறதாவது: *“நான் (யாவே தேவன்) என் மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கிப் படைத்து, என் நாமம் தரிக்கப்பட்ட யாவரை யும் கொண்டு வா என்பேன்”.* அதாவது ராஜ்யம் ஸ்தாபிக் கப்படும் போது, இஸ்ரயேல் தெய்வீகத் தயவிற்குத் திரும்ப வர அழைக்கப்படும் போது யாவே தேவனுடைய நாமம் தரிக்கப்பட்ட யாவரும் அதிலிருப்பார்கள் (அப் பொழுது இஸ்ரயேல் என்ற பெயர் தேவனுடைய ஜனங் களாக இருக்கும் அனைவருக்கும் பொருந்தும் - *ஏசா. 43:7; ரோம. 9:26, 33; 10:13).*

*22.* இவ்வாறாக “என் தேவனாகிய யாவே வரு வார்; தேவரீரோடே எல்லா பரிசுத்தவான்களும் வருவார்கள் (அவரோடு இணைந்திருப்பார்கள்)” *(சகரி. 14:5).* புறஜாதியார் ஆளும்படி அவர்களுக்கு அனுமதிக் கப்பட்ட காலம் முடிந்த பிறகும் ஒப்புரவாகுதலின் நாளின் பலி செய்யும் பகுதி (சுவிசேஷ யுகம்) முடிந்த பிறகும், பிரதான ஆசாரியரின் “சரீரமாகிய” சபைக்காக மட்டுமல்ல, அவருடைய “வீட்டாருக்காகவும்” “சகல ஜனங்களுக்காகவும்” அவர் ஒப்புரவாகுதலைச் செய்து

முடித்த பிறகு, தேவனுக்கேற்ற காலத்தில் அவர் வெளியே வந்து சகல ஜனங்களையும் ஆசீர்வதிப்பார். யாவே தேவன் கொடுத்த மரண தண்டனை அப்பொழுது பூமியிலிருந்து நீக்கப்படும். அவருடைய பாதஸ்தானம் திரும்ப அவரால் அங்கீகரிக்கப்படும். நீதியினாலும் சத்தியத்தினாலும் அன்பின் பரிசுத்த ஆவியினாலும் அந்த பாதஸ்தானம் அலங்கரிக்கப்படத் தொடங்கும். மேலும் மில்லினிய யுகத்தின் முடிவில், விருப்பத்துடன் கீழ்ப் படிகிற நீதிமான்கள் பூரண நிலையை அடைந்து, யாவே தேவனோடு திரும்ப இணைக்கப்பட்டு, விருப்பத் துணிவுடன் கீழ்ப்படியாத அனைவரும் அழிக்கப்படும் வரை அந்த வேலை தொடர்ந்து முன்னேற்ற மடையும் *(அப். 3:23; வெளி. 20:9).*

*23.* தீர்க்கதரிசி இந்த காட்சியை மேலும் விவரித்து; பூமி படிப்படியாக யாவே தேவனுடைய பாதஸ்தானமாக மகிமைப்படுத்தப்படும் அந்த நாளைக் குறித்து இவ்வாறு அறிவிக்கிறார்: *“அந்நாளில் வெளிச்சம் இல்லாமல், ஒருவேளை பிரகாசமும் ஒருவேளை மப்புமா யிருக்கும். ஒருநாள் உண்டு, அது கர்த்தருக்குத் தெரிந்தது; அது பகலுமல்ல இரவுமல்ல; ஆனாலும் சாயங்காலத்திலே (தெளிவான) வெளிச்சமுண்டாகும்.” (சகரி. 14: 6, 7).*

*24.* இங்கே வர்ணிக்கப்பட்ட “நாளை” சிலர் “இருளும் அந்தகாரமுமான நாள்... மப்பும் மந்தாரமுமான நாளாகிய” “பழிவாங்குதலின் நாளோடு” குழப்பிக் கொள்கிறார்கள். அது அவ்வாறு அல்ல. இங்கே சகரியா தீர்க்கதரிசி “ஒருவேளை பிரகாசமும் ஒரு வேளை மப்புமாக இருப்பதாகக்” குறிப்பிடுகிற நாள் மில்லினிய யுக நாளாகும். அந்த நாளில் நீதியின் சூரியன் உதித்து, பூமியிலுள்ள பாவம், மூட நம்பிக்கை மற்றும் மரணம் என்னும் தீமையான சூழ்நிலைகளை அகற்றும்படி பிரகாசித்தாலும், அது ஓரளவிற்கு மட்டுமே பிரகாசமான நாளாயிருக்கும். ஏனென்றால் அந்த நாளில் விழுந்து போன மனுகுலத்தின் ஒரு தலைமுறைக்கு அடுத்து மற் றொரு தலைமுறை கல்லறையிலிருந்து திரும்பக் கொண்டு வரப்பட்டுக் கொண்டிருக்கும். அவர்கள் பூரணத்துவத்தை நோக்கி முன்னேறும் போது இழந் ததைத் திரும்பக் கொடுத்தலின் பல்வேறு நிலைகளி லிருப்பார்கள். ஆனால் யாவே தேவனுடைய பாத ஸ்தானத்தின் மேல் அவருடைய பாதங்கள் திரும்ப ஸ்தாபிக்கப்படும் அந்நாளிலே “மந்தாரம்” (காரிருள்) இனி இருப்பதில்லை என்று நிச்சயமாக அறிந்து கொள் வது என்னே புத்துணர்ச்சி அளிப்பதாக இருக்கிறது. அந்த மில்லினிய நாளின் முடிவில் உலகம் மென்மேலும் இருளடைவதற்குப் பதிலாக, “யாவேயின் மகிமையின் அறிவாகிய ஒளியின்” நடுப்பகலை மட்டுமே சென்றடைந் திருக்கும். அதின் சூரியன் இனி ஒருபோதும் அஸ்தமிப் பதில்லை.

*25.* யாவே தேவனுடைய பாதங்கள் அவருடைய பாதஸ்தானத்தின் மேல் திரும்ப ஸ்தாபிக்கப்படும் *"அந் நாளிலே ஜீவ தண்ணீர்கள் எருசலேமிலிருந்து புறப் படும்"* என்ற அறிக்கையானது *(சகரி. 14:8),* இதற்கிணை யாக எசேக்கியேலும் *(எசே.47:1-12)* வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவானும் *(வெளி.22:1,2)* கொடுக்கிற சாட்சியை நமக்கு நினைவுப்படுத்துகிறது. மில்லினிய யுக ராஜ்ய சிங்காசனத்திலிருந்து புறப்படுகிற ஜீவ தண்ணீர் கள் என்ற இதே உருவகத்தின்கீழ்,அந்த தண்ணீரால் வரும் இழந்ததைத் திரும்பக் கொடுக்கும் ஆசீர்வாதங்களை இவ்வசனங்கள் காண்பிக்கின்றன. "விருப்பமுள்ளவன்" வந்து இலவசமாய் அந்த தண்ணீரை வாங்கி பானம் பண்ணக்கூடும். மேலும் ஆரோக்கியமடைவதற்கேதுவான இலைகளுடைய நித்திய ஜீவனின் கனிதரும் விருட்சங்கள் பூமியில் மனந்திரும்புகிற அனைவரின் எல்லா அபூரணங் களையும் குணமாக்கும்.

*26.* ஆஹா, *"அப்பொழுது கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார்" (சகரி. 14:9).* அவருடைய விசுவாச உண்மைத்துவமுள்ள ஜனங்கள் நீண்ட காலமாக ஜெபித்த அவருடைய ராஜ்யம் பூமியில் வந்திருக்கும். மேலும் அந்நாளின் முடிவுக்குள், தேவனுடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதைப் போலவே பூமியிலும் செய்யப்படும். அப்பொழுது தேவனுடைய பாதஸ்தானம் மெய்யாகவே மகிமையுள்ளதாக இருக்கும். எழுதப் பட்டிருப்பதைப் போல் “பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருக்கும் என்று என்னுடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்” *(எண். 14:21).*

*இவ்வுலகத்தில் அழிவு உண்டாக்குகிற எந்தக் காரியமும்*
*அந்த புதிய பூமியில் இருப்பதில்லை;*
*அந்த புதிய ஜீவனை எவ்விதத் தீமையும் கறைப்படுத்தாது.*
*அங்கே இனி ஒரு சாபமுமிராது.*
*இருதயம் நொறுங்குண்டவர்களே!*
*புலம்புவதை நிறுத்துங்கள்;*
*உங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாள்*
*உதித்துக்கொண்டிருக்கிறது;*
*சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர்:*
*“இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்”*
*என்கிறார்.*

*மரித்தவர்களுக்காக நாம் துக்கிக்கிறோம், ஆனால்*
*அவர்கள் நிச்சயமாக விழித்தெழுவார்கள்!*
*வழிவிலகிப்போனவர்களுக்காகத் துயரப்படுகிறோம்,*
*ஆனால் அவர்கள் மீட்டுக்கொள்ளப்படுவார்கள்!*
*ஆ! இந்தப் பரிசுத்தமான தேவ வார்த்தை*
*நம்மிடம் இல்லாதிருந்தால்,*
*நாம் முற்றிலும் மனமுறிவு அடைந்திருப்போம்!*
*கண்ணீரினால் பார்வை மங்கிப்போனவர்களே,*
*கண்களை ஏறெடுத்து, தேவனுடைய வாக்குத்தத்தத்தின்*
*வானவில்லைப் பாருங்கள்!*
*துயரப்படுகிற இருதயங்களே,*
*“இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்” என்ற*
*தீர்க்கதரிசன சத்தத்தைக் கேட்டு களிகூருங்கள்!*

★★★★★★★★★★★★★★★★★★★★★

***உங்கள் கவனத்திற்கு***

சில கட்டுரை பகுதிகள்,
நமது அழைப்பிற்கும்,
இதுவரை கிடைத்த நிகழ்கால சத்தியத்திற்கும்
இணங்க, மாற்றம் செய்யப்பட்டுள்ளது


# புது உடன்படிக்கை

*Monthly newsletter published by*
*the brethren of the*
*Millennial Bible Truth Movement*
*Website: www.mbtm.in*